Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# மெய்வாழ்க்கை கண்டறிந்த வேந்தன்.

## புத்தர் ஞானம்.

(முருகதாசன் எழுதுகிறார்.)

பம்பிசாரனது நாட்டின் தலைநகரமாகிய ராஜகிருகத்தை ஐந்து குன்றுகள் சுற்றிலும் காத்துக் கொண்டிருந்தன. மனிதர் காலடிகள் பட்டுப் பட்டுத்தேய்ந்துபோன கற்கள் பாவிய ஒரு பாதை அந்நகரினின்று புறப்பட்டு வயல்களினருகாகவும், மூங்கில் கூட்டங்களினிடையிலும் ஓடி மாந்தோப்புகளினூடே திரிந்து அந்நகரத்தின் கிழக்குப் பக்கத்திலிருக்கிற இரத்னகிரி யென்ற குன்றின் அடிவாரத்தில் கொண்டு விடுகிறது. அம்மலையின் மேல்புறத்தில் ஒரு குகை யிருக்கிறது. இக்குகையில் தான் கௌதமசாக்கிய முனி (புத்தராகியஇளவரசன்) வெகு காலம் வாழ்ந்து வந்தார். வெயிலென்றும், மழை யென்றும் பாராமல் தர்மசிந்தையை யுள்ளவர் கொடுத்த பிச்சையை யுண்டு காயாசந்தரித்து, இரவில் குகையைச் சுற்றிலும் நரிகள் வளைந்துவந்து ஊளையிடுவதையும், புலிகள் அடுத்த காட்டில் உறுமுவதையும் கேட்டுக் கொண்டு, தனியாக அப்புல்லாந்தரையிற் படுத்துறங்கி, இப்படி ஒவ்வொரு வருஷமாக தனியாக அங்கே காலங் கழித்து வந்தார். இன்பத்திற்சென்று பிறந்த அழகிய உடலை யடக்கிக் கொண்டு எப்பொழுதும் தியானத்திலேயே நேரத்தைச் செலவிடுவார். புறாக்கள் பக்கத்திலிருந்த உணவைக் கொத்திக் கொண்டு போவதையும், அணில்கள் தன் மேல் குதித்து விளையாடுவதையுங்கூட அறியாதபடி சில சமயங்களில் தியானத்தில் அமர்ந்திருப்பார்.

வெயிலின் கொடுமையால் வஸ்துக்களெல்லாம் ஊசலாடுவது போற்றோற்றும் நடுமத்தியானத்தில் உட்காருமிவர் சூரியன் உருண்டுருண்டு மரங்களின் உச்சிகளையும், குன்றுகளின் சிகரங்களையும் சொர்ணமாக்கிக் கொண்டு மேற்கே மறைவதையும், அவனரசாண்ட விடத்தில் சந்திரன் தன் தாரகை கணங்களோடு வந்து தன் வெண் கதிர் பரப்பியாள்வதையும் உணராது இவ்வுலகத்தின் துன்பங்களையும், அவைகளின் காரணத்தையும் பற்றித் தியானித்துக் கொண்டிருப்பார். தூரத்திலுள்ள நகரத்தின் ஓசை யெல்லாம் அடங்கி அடுத்த காட்டில் மிருகங்கள் செய்யும் சப்தமும், சிலவண்டின் ஒலியுமே நிறைந்திருக்கும் நடுராத்திரியில் படுப்பார் ஆயினும் அருணோதயத்திற்கு முன்பே எழுந்திருந்து அக்குன்றின் இருண்ட பாறை யொன்றின்மேல் நின்று கொண்டு சுற்றுமுள்ள பூமியை அதில் வாழுமுயிர்களுக் கெல்லாம் பாவிய அன்புடன் நோக்கிக் கொண்டிருப்பார். சிறிது நேரத்திற்கெல்லாம் கிழக்கு வெளுத்து அவ்வெளிச்சம் மெல்ல மெல்லப் பூமி முழுவதும் பரவ, ஆகாயத்தில் மேகங்களெல்லாம் அக்கினி சுவாலை போற் பிரகாசிக்க உன்னத விருட்சங்களின் நுனிகளையும், குன்றுகளின் சிகரங்களையும் பொன் முலாம் பூசும்படி தன் கதிர்களை விட்டுக் கொண்டு உலகத்திற் கெல்லாம் கண்போன்ற பரிதியும் தன் வரவை எதிர்பார்த்துக் கொண்டு பாடும் பக்ஷிகளின் மனதைக் களிப்பித்துக் கொண்டு உதயமால்வரை யெழுந்தனன். புத்தர் அப்போது சூரியனை வணங்கி பின் தனது காலைக் கடனை முடித்துக் கொண்டு அக்குன்றினின்று நகரத்திற்குப் போகும் பாதை வழியாய் நடப்பார். கையில் பிச்சைப் பாத்திரத்தை ஏந்திக் கொண்டு ஆண்டியைப்போல தெருத் தெருவாக நடந்து தனக்கு வேண்டிய சிறு உணவை யாசிப்பார். தெய்வத்தன்மையாகத் தோன்றும் அவரது கம்பீரத்தையும், கருணை விளங்கும் அழகையும் பார்த்த ஜனங்கள் எல்லாரும் மனமுவந்து கொடுத்ததில் பாத்திரமும் சீக்கிரம் நிரம்பிவிடும். அவரும் இட்டவர்க்கெல்லாம் மெதுவாக வந்தனமளித்து பாத்திரம் நிறைந்ததும் தானிருந்த காட்டிற்குப் போய் அங்கிருந்த தபசிகளுடன் சாப்பிட்டு, படித்து, தியானித்துக் காலங் கழிப்பார்.

இவ்விரத்தினகிரியின் தாழ்வரையில் அதற்கும் நகரத்திற்கும் இடையில் உள்ள அமைதியான சோலைகளில் சில தபசிகள் வசித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் இவ்வுடல் உயிருக்குப் பகை யென்றும், முரட்டு மிருகத்தைப்போல் அதைப் பிடித்துக் கட்ட வேண்டுமென்றும் எண்ணி நோவு இனி உடலை வருத்தாதிருக்கும் வரை அதை வருத்தி வந்தார்கள். அவர்களிற் சிலர் கைகளை இரவும், பகலும் உயர்த்தின வண்ணமே நின்றார்கள். அதனால் இரத்தோட்டமின்றி நோயினால் வாடி உலர்ந்த மரங்களின் கொம்புகள்போல் நீட்டிக் கொண்டிருந்தன. வேறு சிலர் மிகுந்த பிடிவாதத்துடன் கைகளை மடக்கிக் கொண்டிருந்தார்கள். அதனால் நகங்கள் கைகளைச் சுற்றியும், ஊடாகவும் வளர்ந்து தொங்கின. சிலர் கூரிய கற்கள் மேற் படுத்து அதனால் கீழண்ட தசையை நெருப்பினாலும், முட்களாலும் இம்சைப்படுத்தினார்கள். சிலர்பிணங்கள் குவிந்து காக்கை, கழுகு, நாய், நரி இவைகள் வட்டமிடும் சுடலையில் வசித்தார்கள். சிலர் ஒரு காலை ஊன்றி மறு காலை மடக்கி அப்படியே நின்றார்கள். அதனால் ஒரு கால் சூம்பி இப்படிக் கோரமாக அங்கங் குறைந்து பிணம்போல் ஒட்டியுலர்ந்தவர்களெல்லாம் கூட்டமாக அங்கிருந்தார்கள். ஒரு பக்கத்தில் ஒருவன் தினந்தோறும் ஆயிரம் அரிசியைக் கணக்காய் எண்ணிவைத்து பட்டினியால் ஒட்டியுலர்ந்து பொறுமையோடு அவைகளை ஒவ்வொன்றாகத் தின்று அப்படி தன்னைச் சாதகித்துக் கொண்டிருந்தான். மற்றொருவன் நாவுக்கு ருசி காட்டக்கூடாதென்று, கசப்பான சருகுகளைத் தின்று, தேகப் புஷ்டியைக் குறைத்துக்கொண்டு வந்தான். பின்னொருவன் தன்னுடலுக் கிழைத்த துன்பங்களால கண்ணிழந்து, செவியிழந்து, பேச்சிழந்து, நொண்டியாய் தனக்கு இனி வரப்போகிற மோட்சத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

புத்தர் இவைகளை யெல்லாம் மிகுந்த விசனத்துடன் பார்த்து ஒரு நாள் இவர்களின் தலைவனை நோக்கி மிக வருந்தும் ஐயனே! நான் சத்தியத்தைத் தேடிக் கொண்டு அனேக நாளாக இக்குன்றில் வசிக்கிறேன். இந்த வாழுமென் சகோதரர்களும், தாங்களும் தங்களையே மிக வருத்திக் கொள்வதைப் பார்க்கிறேன். இவ்வாழ்வின் துயரம் போதாதென்றோ இன்னும் இதற்குத் தீங்கிழைத்துக் கொள்கிறீர்கள் என்று வினவ, அத்த பசி, ஒருவன் உடலை வருத்தி வருததினால் அவ்வாழ்வு துன்பமயமாய் அவனுக்கு மரணம் பேரானந்தமாக மாறினால் இப்படிப்பட்ட தபசு ஜீவனிடத்திலிருந்து பாவமாகிய அழுக்கை எடுத்து விடும். அப்போது ஜீவன் பரிசுத்தமாகி இத்துன்ப உலையிலிருந்து நம்மால் எண்ணக்கூட முடியாத இன்பத்தையுடைய சுவர்க்கங்களுக்குப் போகும் என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்றான்.

அதற்கு புத்தர் அதோ ஆகாயத்தில் பொன்னுடை போல் மிதக்கிற மேகம் கடலினின்றங்கே எழுந்தது. ஆயினும் அது மழைத்துளிகளாகக் கீழேவிழுந்து கரடு முரடாயும் மலினமாயுமிருக்கிற நிலங்களின் வழியாக வடிந்து கொண்டும், தரை வெடிப்புகளினூடாக அமுந்துக் கொண்டும் சென்று களிமணகலங்கிவரும் சிற்றாறுகளின் வெள்ளத்தில் சேர்ந்து கங்கையுடன் கலந்து கடைசியாகத் தான் எதினின்று எழும்பியதோ அக்கடலிலே போய் விழுகிறது. நண்பனே! சுவர்க்கத்திலிருக்கும் புண்ணியாத்துமாக்களுடைய கதியும் இப்படித் தானனன்றோ? உயர எழுவது மறுபடியும் கீழே விழுகிறது. நாம் விலைக்கு வாங்குவது சீக்கிரம் செலவழிந்து போகிறது. ஆகையால் நீங்கள் உங்களது இரத்தத்தினால் சுவர்க்கத்தை விலைக்கு வாங்கினீர்களானால் நீங்கள் செய்த தவத்தின் பயன் அழிந்து போகும் போது இவ்வாழ்வின் துன்பத்தை மறுபடியும் அனுபவிக்கத்தானே வேண்டிவரும் என, அவ்யோகி, ஆம், வந்தாலும்வரும்; எங்களுக்கிதொன்றுந் தெரியாது; ஆயினும் இரவின் பின் பகல் வருகிறது; குழப்பத்தின் பின் அமைதியுண்டாகிறது எனபதை நாங்களறிவோம். ஆகையால் சுயேச்சையாகத் திரியும் ஜீவனைக் கட்டிப்பிடிக்கிற இப்பாழுமுடலைப் பகைத்து ஜீவனுக்காக இச்சிறு துன்பங்களைச் சகித்து அதனால் தேவர்களிடத்திலிருந்து பெரிய பேறுகளை அடைய எண்ணுகிறோம் என்றான்.

# வைத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவியசரித்திரம்.

2-ம் பாகம்.

அத்தியாயம் 22.

மகாத்மாகாந்திதமது அனுபவங்களை "யௌவன இந்தியா" பத்திரிகையில் எழுதி வருவதில், 2-வது பிரிவு 22-வது அத்தியாயம் பின் வருமாறு:—

ஆத்மானுபவத்தின் நிமித்தம் நான் தென்னாப்பிரிக்காவில் இந்திய சமுகத்துக்குத் தொண்டுபுரிவதையே என்னுடைய விரதமாகக்கொண்டேன். தொண்டின் மூலமாகத்தான் தெய்வம் ஸாக்ஷாத்யமாகும் என்று எனக்குத் தோன்றிற்று. இந்தியருக்குத்தொண்டு புரிய நான் தேடாமலே எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. நான் பிறந்த கத்தியவாரில் நடந்த சூழ்ச்சிகள் பிடிக்காமல் தென்னாப்பிரிக்காவுக்குச்சென்றேன். ஜீவனத்துக்கு வகை தேடுவது மற்றொரு உத்தேசம். ஆனால் அந்த வகையில் தெய்வத் தொண்டிற்கும், ஆத்ம ஞானத்திற்கும், அனுகூலமான ஓர் நிலைமை பிராப்தமாயிற்று.

அறிவை விருத்திசெய்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் எனக்கு அபரிமிதமாயிருந்தது. எனது கிறிஸ்தவ நண்பர்கள் அந்த ஆவலை இன்னும் அதிகமாகத் தூண்டிவிட்டனர். நான் சும்மாவிருக்க அவர்கள் விடுவதில்லை. டர்பனில் மிஸ்டர் ஸ்பென்ஸர் வால்டன் என்ற பாதிரிமார்சங்கத் தலைவருடைய குடும்பத்துடன் நான்நெருங்கிப்பழக நேர்ந்தது. கிறிஸ்தவ மதத்தை நான் தழுவும்படி அவர் என்னைக்கேட்டதாக எனக்குஞாபகமில்லை. ஆனால் அவருடைய வாழ்வையும் நடமாட்டங்களையும் நான் தாராளமாகக் கவனிக்கும்படி நேர்ந்தது. மிஸஸ்வாட்ஸன் மிகவும் புத்திசாலியானஸ்திரீ. தம்பதிகளுடைய நடத்தையை நான் மெச்சினேன். நானும் அவர்களும் எவ்வளவோ விவாதிப்பதுண்டு. இருவர் மனமும் மாறவில்லை; ஆனால் பரஸ்பரம் சகிப்புத்தன்மைக்குக் குறைவில்லை.

மத விஷயத்தில நான் தீவிர சிரத்தைகொண்டதற்கு அவர்களே காரணபூதர்கள். டர்பனில் எனக்கு ஓய்வே கிடையாது. அப்படி ஏதாவது கிடைத்தால் மத ஆராய்ச்சியில் அந்நேரத்தைச் செலவிடுவேன். ராயசந்த்பாய்தான் எனக்கு குரு. நர்மதசங்கர் எழுதிய 'தர்மவிசாரம்' என்ற புத்தகத்தை ஒரு நண்பர் எனக்கு அனுப்பிவைத்தார். அதன் முகவுரை எனக்கு மிகவும் உபயோகமாயிருந்தது. ஒரு பக்கங்கூட விடாமல் அப்புத்தகத்தைப் படித்தேன. மாக்ஸ்முல்லர் எழுதிய 'இந்தியாவின் உபதேசம்' என்ற புத்தகத்தையும், பிரம்மஞான சங்கத்தார் வெளியிட்ட உபநிஷத் மொழிபெயர்ப்பையும் ருசியுடன்வாசித்தேன். ஹிந்து மதத்தில் எனக்கிருந்த மதிப்பை அது இன்னும் அதிகரிக்கச்செய்தது. ஹிந்து மதத்தின் அழகு என் கண்ணுக்குப் புலப்பட்டது. 'முகமதும் அவருடைய சிஷ்யர்களும்' என்று வாஷிங்டன் ஆர்வின் எழுதிய புத்தகத்தையும், நபிகள் நாயகத்தைப்பற்றி கார்லைல் எழுதிய குறிப்புகளையும் வாசித்தேன். நபிகள் நாயகத்தினிடத்தில் எனக்கு விசேஷ மதிப்பு ஏற்பட்டது.

கொஞ்சங் கொஞ்சமாகப் பல மதங்களையும்பற்றிய ஞானம் எனக்கு உண்டாயிற்று. நான் கற்றறிந்த விஷயங்களை அனுஷ்டானத்தில் கொண்டு வரவும் முயன்றேன். சில யோகாப்பியாசங்களையும் ஆரம்பித்தேன். ஆனால் அத்துறையில் அதிக தூரம் செல்ல முடியவில்லை. இந்தியாவக்குத் திரும்பிய பிறகு சில நிபுணர்களின் உதவியைக்கொண்டு மறுபடி தொடர்ச்சியாக யோகாப்பியாசம் செய்தேன். ஆனால் அந்த அபிலாஷை இன்னும் பூர்த்தியாகவில்லை.

டால்ஸ்டாய் எழுதின நூல்களை விடாமல் படித்தேன். அவற்றில் அடங்கிய உண்மைகள் என் மனதில் ஆழப் பதிந்தன. அன்புக்கு அளவுகடந்த சக்தியுண்டென்பதை உணரலானேன்.

அதே சமயத்தில் மற்றொரு கிறிஸ்தவக் குடும்பத்துடன் நான் பழகநேர்ந்தது. அவர்களுடைய யோசனைப்படி பிரதி ஞாயிற்றுக்கிழமையும் நான் வெஸ்லியன் தேவாலயத்துக்குப் போவேன். என்னை சாப்பிடவும் அழைத்தார்கள். தேவாலயத்துக்குப் போனதால் எனக்கு விசேஷமான உணர்ச்சி எதுவும் ஏற்படவில்லை. பிரசங்கங்கள் சுவையற்றிருந்தன. தேவாலயத்தில் கூடும் கூட்டங்களிலே மதப்பற்று நிறைந்திருக்கத் தென்படவில்லை. பக்தர் கூட்டமாக அது என் மனதுக்குப் படவில்லை. ஏதோ தமாஷாக வழக்கப்படி கோயிலுக்கு வருவதுபோல் எனக்குத் தோன்றிற்று. தேவாலயத்தில் நான் என்னையறியாமல் தூங்கிப்போவேன். எனக்கு அது வெட்கமாக இருந்தது. ஆனால் என் பக்கத்திலிருந்தவர்களும் அதேமாதிரி தூங்குவதைக் கண்ட பின் நான் அதிகமாக வெட்கப்படுவதில்லை. கொஞ்ச காலத்திற்குள் நான் ஏற்கனவே சொல்லிய குடும்பத்தாருடன் பழகுவதையும் நிறுத்திக்கொண்டேன். அவர்களுடைய வீட்டுக்கு வரவேண்டாம என்று எனக்கு எச்சரிக்கை செய்யப்பட்டதாகக் கூடச்சொல்லலாம். அவ்வீட்டுக்காரி மிகவும் நல்லவள். ஆனால் ஓரளவு குறுகிய புத்தியுடையவள். மத விஷயங்களைப்பற்றி அடிக்கடி விவாதிப்போம். ஒரு நாள் புத்தரையும் ஏசு நாதரையும் ஒப்பிட்டுப்பேசி வந்தபோது, "கௌதமருடைய காருண்யத்தைப் பார்; ஸகல ஜீவராசிகளிடத்திலும் அவர் காருண்யங்கொண்டவர்; ஏசு நாதரைப்பற்றி அப்படிச்சொல்லமுடியுமா?" என்றேன். அப்பெண்மணிக்கு வருத்தமுண்டாயிற்று. நானும் பேச்சை நிறுத்திக் கொண்டேன. பிறகு சாப்பிடப் போனோம். 5 வயதுள்ள ஒரு சிறுவன் அப்பெண்மணிக்குண்டு. அப்பையனிடத்தில் எனக்கு மிகவும் பிரியம். அவனுடைய தட்டிலிருந்த மாம்சத்துண்டைப்பற்றி நான் கேலியாகப் பேசினேன். என் தட்டில் ஆப்பிள் பழம் வைக்கப்பட்டிருந்தது. என்னுடைய பேச்சைக்கேட்ட பின், அவனும் பழமே சிறந்ததென்று சொல்ல வாரம்பித்தான. தாயாருக்கு இன்னது சொல்வதென்று தெரியவில்லை. எனக்கு அது ஓர் எச்சரிக்கையாயிருந்தது. உடனே வேறு விதமாகப் பேச்சைத் திருப்பினேன். மறுவாரம் வழக்கம் போல் அவ்வீட்டுக்குப் போனேன். ஆனால் அந்தரங்கத்தில் கொஞ்சம் பயந்தான். என்னைக் கண்டதும் அப்பெண்மணி "உங்கள் பழக்கத்தால் என்னுடைய பையன் மனதுக்கு வருவதாகக்காணும். இவ்வாறு நான சொல்லுவதை விபரீதமாக எடுத்துக் கொள்ளமாட்டீர்களென்ற நம்புகிறேன். பிரதிதினமும் மாம்சம்சாப்பிட மறுக்கிறான். பழமே வேண்டு மென்கிறான். மாம்சம் சாப்பிட மறுத்தால் உடம்பு பலஹீனப்பட்டுவிடும். இல்லாவிடில் தேக அசௌக்கியம் ஏற்பட்டுவிடும். ஆகையால நீங்கள் இனி அப்பையனுடன் எதுவும் 'பேசவேண்டாம்' என்றாள். நான் அதற்கு 'அப்படியா? எனக்கும் வருத்தமாகத்தான் இருக்கிறது. எனக்கும குஞ்சு குழந்தைகள் உண்டு. நான் சாப்பிடுவதையும், சாப்பிடாமல் ஒதுக்குவதையும் குழந்தைகள் பார்த்துத்தான் அவைகளும நடந்து கொள்ளுகின்றன. நான் அடிக்கடி இங்கு வருவதை இனி நிறுத்திக்கொண்டு விடுகிறேன். நமது நட்பை இது பாதிக்காமலிருந்து நடக்கவேண்டுமென்று நம்புகிறேன்" என்று சொன்னேன். அப்பெண்மணிக்கு உடனே திருப்தியுண்டாகி விட்டது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## ஜாதி இறுமாப்பு.

மகாத்மாகாந்தி "யௌவன இந்தியா" பத்திரிகையில் எழுதுவதாவது.—

ஜாதியில் உயர்வு தாழ்வு என்ற வித்தியாசங்களை ஒழிப்பதில் சிரத்தை கொண்ட ஒரு ஜெர்மன் நிருபர் எனக்கனுப்பியுள்ள ஒரு வியாசத்தில், வெள்ளைக்கார ஐரோப்பியர்கள் அபிஸீனியாக்காரருக்கும் ஈிப்பு தேசத்தாருக்கும் இழைத்த அநீதிகளை எடுத்துச் சொல்லியிருப்பதோடு, அமெரிக்க ஐக்கிய நாட்டில் நீக்ரோவர்களுக்கு வெள்ளைக்காரர்கள் இழைக்கும் கொடுமையையும் வருணித்திருக்கிறார். அவர் கூறும் திருஷ்டாந்தங்களில் மூன்றை மட்டும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(1) கிறிஸ்தவ குருமார்கள் ஒருநாள் பாலஸ்தீனத்துக்குப் பிரயாணமாகிக் கொண்டிருந்தார்கள். நீக்ரோ வகுப்பைச்சேர்ந்த ஒரு கிறிஸ்தவ குருவும் டிக்கட்வாங்கினார். ஆனால் அவருடைய சகாக்களான வெள்ளைக்காரர்கள் தங்களோடு அந்த நீக்ரோவைப் பிரயாணஞ் செய்யக்கூடாதென்று சொல்லிவிட்டனர். வாங்கிய டிக்கட்டை வாபீஸ் செய்யவேண்டியதாயிற்று. நஷ்ட ஈடு கொடுத்து அந்த கறுப்பு மனிதரை வெள்ளைக்காரர்கள் விலக்கிவிட்டனர்.

2. கரோலினா என்ற மாகாணத்தில் ஒரு வெள்ளைக்காரர் ஒரு மோட்டார் வண்டியைத் திருடிவிட்டார். 4 வாரம் காவல்தண்டனை விதிக்கப்பட்டது. அதே நியாயஸ்தலத்தில் ஒரு நீக்ரோ ஜாதிக்காரர் ஒரு துவிசக்கர வண்டியைத் திருடியதற்காக 3 வருஷ கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்.

3. டிவாலர் என்ற மற்றொரு மாகாணத்தில் ஒரு கறுப்பு மனிதர் வெள்ளைக்கார ஸ்திரீயைப் பலவந்தமாகப் புணர்ந்ததற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டார். ஆனால் அலபாமா என்ற விடத்தில் இரண்டு வெள்ளைக்காரர்கள் கறுப்பு ஜாதி ஸ்திரீகளைப் பலவந்தமாய்ப் புணர்ந்ததற்கு 250 டாலர் அபராதம் மாத்திரம் விதிக்கப்பட்டனர்.

வெள்ளைக்காரர் இவ்வாறு ஜாதி இறுமாப்புப் பிடித்துத் திரிகிறார்களென்றால், நாமும் பிறப்பினால் உயர்வு தாழ்வு பாராட்டிவருகிறோம். தீண்டாதவர் எனப்படுவோரை நாம் நடத்துவது போல்தான் வெள்ளைக்காரன் கறுப்பு மனிதனை நடத்துகிறான். செல்வத்துறையில் மேனாட்டார் என்ன அபிவிருத்தி யடைந்து என்ன? ஸன்மார்க்கம் விருத்தியாகவில்லை. ஸன்மார்க்கந்தான் எந்த நாகரீகத்துக்கும் முக்கியமான லட்சணமாகும்.

குறிப்பு:—இந்தியக் கோயில்களிற் சிலதில் நாய்போகலாம்; மனிதர் போகக்கூடாது. மேனாட்டால் சர்ச்சுகளில் வெள்ளையர் போகலாம்; கறுப்பு மனிதரும் நாயும் போகக்கூடாது. அங்கு நாயையும் கறுப்பு மனிதரையும் ஒன்றுகபாவிக்கிறார்கள். இங்கோ நாயினும் இவரைக் கீழாக மதிக்கிறார்கள். இவர்களில் எவர்களுடைய அறிவு நடவைக்கை கொழுந்துபோல் நட்பமானது? (ப-ர்.)

## பேரையூர் பஞ்சாயத்துக் கோர்ட் எலக்ஷன்.

இவ்வூர் பஞ்சாயத்துக்கோர்ட்டில் ஸ்ரீமான் கொ. மு. பொன்னையா நாடாரவர்கள் வகித்துவந்த ஸ்தானம் காலியாயிருந்தபடியால் மேஷ் ஸ்தானத்திற்கு வேறொருவரை நியமனம் செய்ய வேண்டியதிருந்ததில், அந்த ஸ்தானத்திற்கு நாலு கனவான்கள் அபேட்சகர்களாக நின்றார்கள். எலக்ஷன் 4—10—26-ல் வேளாளர் சவுக்கில் முதுகுளத்தூர் சப்மாஜிஸ்டிரேட் (கனம் சாமிதாஸ் நாடாரவர்கள்) அக்கிராசனத்தின் கீழ் நடந்தேறியது. ஸ்ரீமான் வீ. எம். சிவத்தையா நாடாரவர்களுக்கு 92 ஓட்டுகள் கிடைத்ததால் அவரே தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள். இவர் மிகவும் பொதுஜன உபகாரி. கல்வியைக் கற்றுணர வாய்த்தவர். [illegible] ஸ்ரீமான் முனிசாமி நாடார் எழுதுகிறார்.

## ரஸத்திரட்டு.

### வெள்ளைக்காரர் ஹிந்துக்குடும்பத்தில் பிறக்கிறார்

அலகபாத் 'லீடர்' பத்திரிகைக்கு வக்கீல் ஸ்ரீமான் சாதயக்ருஷ்ணன் ஸாஹேப் பின்வருமாறு எழுதுகிறார்:— பரீல்லி பட்டணத்தில் ராயஸக்காரரான லாலா நாமகரணபாலரைப் பார்க்கப் போயிருந்தேன். அவருடைய பையனாகிய பஜ்ராங் பகதூர் 1918-ல் பிறந்தவன். 4-ம் வயது வரையில் வெள்ளைக்காரரைப் போலவே முள் கத்தியால் சாப்பிட்டு வந்தான். உடம்பு வெள்ளை நிறம். தலைமயிர் சாம்பல் நிறம். பூர்வஜென்மத்தில் ஆர்தர் என்று அவனுக்குப் பெயராம். அப்பையனைக் கேட்டதற்கு, மகாயுத்தத்தில் ஒரு வெள்ளைக்கார பட்டாளத்தில் ஸோல்ஜராயிருந்து தான் இறந்துபோனதாகவும், பரீல்லியில் மறுபடி பிறந்திருப்பதாயும். 28-ம் வயதில் மூங்கி யிறந்ததாயும் சொல்லுகிறான். அவனுடைய கழுத்திலும் மண்டையிலும் குண்டுக்காயவடுக்கள் இருக்கின்றன. போன வருஷம் வரையில் தனது பூர்வஜன்ம விருத்தாந்தத்தைச் சொல்லிவந்தான். 4 வயது வரையில் ஸோல்ஜரைப்போலவே நடப்பான், விளையாடுவான். இப்போது பழைய வாஸனையை மறந்துவிட்டான்.

### சீனக்காரரின் மரண சாஸனம்.

சீனக்காரர்கள் மரண காலத்தில் உயிலெழுதி வைக்கும் போது, மற்ற நாட்டாரைப் போல் "இன்னின்னாருக்கு இவ்வளவு ஐவேஜி போய்ச் சேரவேண்டும்" என்றுஎழுதுவதில்லை. ஐவேஜி இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலுஞ் சரி சீனக்காரன் தனது பிள்ளைகளும் பேரன்களும் இன்னவிதமாகத்தான் வாழவேண்டும்; அல்லது இன்ன விதத்தில் தன்னைப் பின்பற்றவேண்டும்; அல்லது தன்னுடைய கடைசியான விருப்பம் என்ன வென்று தெரிவிப்பதைத்தான் முக்கிய கடமையாகக் கொண்டிருக்கிறான். ஐவேஜி யிருந்தாலும் இல்லாவிட்டாலும் உயில் எழுதத் தவறுவதில்லை. ஐவேஜியிருந்தால் அதில் ஒருபகுதி தர்மத்துக்கும் உற்சவாதிகளுக்கும் கட்டாயம் எழுதிவைக்கப்படுமாம்.

* *

### கடையைக் கட்டுங்கள்.

[illegible] இருக்கும் கிறிஸ்தவ வாலிபர் சங்கம் ஒன்று இருந்து வந்தது. அச்சங்கத்தார் மதப்பிரசாரம் செய்வதாகக் குற்றஞ்சாட்டி "இனி உங்கள் கடையை மூடிவிட்டு ஊருக்குப்போங்கள்" என்று துருக்கி கவர்ன்மெண்டார் ஆக்ஞாபித்து விட்டனர்.

* *

### வாழைக்காயில் பாம்பு.

இங்கிலாந்தில் லெஸ்டர் என்ற ரயில்வே ஸ்டேஷனில் ஒரு கூலி வாழைக்காய் வண்டி யொன்றைக் காலி செய்த சமயத்தில் ஒரு பாம்பு அவனுடைய கழுத்தைச் சுற்றிக் கொண்டுவிட்டது அதன் குரவளையை அவன் இறுகப்பிடித்து, மியூஸியத்துக்குக் கொண்டுபோகவே, அது பெரிய விஷப்பாம்பென்று தெரிய வந்ததாம்.

* *

### ஒரு தலை கொண்டுவந்தால் 100 டாலர்.

சீனாவில் உள்நாட்டுச் சண்டை நடக்கும் காலங்களில் பிரிட்டிஷார் படும்பாடு கொஞ்சமல்ல. சமீபத்தில் ஹூசங், சங்கீங் என்ற ஊர்களிலிருந்து பிரிட்டிஷார் ஓடிப்போக நேர்ந்தது. பின் சொன்ன பட்டணத்தில், சீனக்காரர்கள் ஒரு பெரிய விளம்பரம் ஒட்டி, "அன்னியருடைய தலையொன்றுக்கு 100 டாலர் கொடுக்கப்படும்" என்று பகிரங்கப் படுத்தினார்கள். ஆனால் பிரிட்டிஷாரிடம் வேலைக்கிருந்த சீனக்காரர்கள் விசுவாசத்துடன் எஜமானர்களுக்கு ஆபத்து வராமல் காப்பாற்றினார்கள்.

### நாய் வரியை உயர்த்தவேண்டும்.

கண்டியில், அக்டோபர் 14 உ நடந்த மாஸ்கலியா தோட்டக்காரர் சங்கத்தின் கூட்டத்தில் நாய்களுக்கு மறுபடியும் வரிவிதிக்க வேண்டுமென்ற தீர்மானம் பலமாக ஆதரிக்கப்பட்டது. பெண் நாய்களுக்கு 5 ரூபாய் வரையில் விதிக்கப்பட வேண்டுமென்று ஒருவர் வற்புறுத்தினார். நோய்பிடித்த விஷநாய்களின் உபத்திரவம் சகிக்க முடியாமலிருப்பதால், நாய் 1-க்கு 25-ம் சண்டு வரி போதாதென்றும், அதிகமான வரி போடவேண்டுமென்றும், ஆண் நாய்களை விடப் பெண் நாய்களுக்கு அதிக வரி போட வேண்டுமென்றும் முடிவில் தீர்மானிக்கப்பட்டது.

* *

### பாம்பு கடிக்கு மருந்து.

பாம்பு கடித்தாலும் சரி, பயங்கரமாகத் தேள் கொட்டினாலும் சரி, துளசிச் சாறு எடுத்து தலையிலும் கழுத்திலும் மார்பிலும் கொப்பூழிலும் அடிக்கடி தடவுவதோடு உள்ளுக்கும் கொஞ்சம் சாப்பிடச் செய்யலாம். வாழைப் பட்டைச்சாறு அகப்பட்டால் அதையே உள்ளுக்குக் கொஞ்சங் கொஞ்சமாகக் கொடுத்து வரலாம். துளசியின் அபார சக்தியைப்பற்றி பிரபுத்த பாரதாவில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. உள்ளிப்பூண்டின் சாற்றுக்கும் துளசிச் சாற்றின் குணமிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

சென்னை சட்டசபை.

எலெக்ஷன் 1926 ஹு நவம்பர் மீ´ 8 உ

திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லா கிறிஸ்தவ சமுகத்தினர்களே!

ஸ்ரீமான் டானியல் தாமஸ் நாடார் அவர்களுக்கே ஓட்டுக்கொடுங்கள்.

சென்னை சட்டசபைக்கு இராமநாதபுரம்-திருநெல்வேலிஜில்லா கிறிஸ்தவ தொகுதிக்கு அபேக்ஷகராய் நிற்கும் நமது குலப்பிரதிநிதி ஸ்ரீமான் டானியல் தாமஸ் நாடார் அவர்கள் நிறம்பிய அறிவாளர். B A பட்டதாரி. சொல்வன்மையும் வாக்சாதுர்யமும் நிறைந்த பிரபல வக்கீல். எல்லோர்க்கும் நல்லாரென ஒப்பத்தகுந்தவர். இன்னாரின் சட்டசபைப் பிரவேசம் நாட்டுக்கும் நமக்கும் நல்லபயனளிக்கும். ஆகையால் ஒவ்வொரு கிறிஸ்தவ சகோதர ஓட்டரும் தவறாது இன்னாருக்கே தங்கள் ஓட்டை பதிவுசெய்யுமாறு வேண்டுகிறோம்.

## இருப்புப்பாதை.

### பாளையங்கோட்டை - நாகர்கோயில்.

நமது பத்திரிகை வாசகர்கள் பாளையங்கோட்டையிலிருந்து நாகர் கோயிலுக்கு இருப்புப்பாதைபோடும் தீர்மானத்தைப்பற்றி அறிந்திருக்கலாம். யான் அறியக்கூறுவது யாதெனின், இது விஷயமாய் இந்திய அரசியலோடு திருநெல்வேலிஜில்லாவில் நாங்குநேரித் தாலுகாவில் களக்காடும் இன்னும் சில கிராமங்களும் பின்வரும் விஷயங்களையிட்டுச் சில தொடர்புடனிருக்கின்றன.

தீர்மானிக்கப்பட்டிருக்கிற பாதை பாளையங்கோட்டையிலிருந்து புறப்பட்டு அம்வாநேரி, ரெட்டியாபட்டி, குந்தக்குளம், நாங்குநேரி வழியாகப் போகவேண்டியது. இத்தீர்மானம் சித்திபெற்று மேற்கூறிய இடங்கள் வழியாகப்பாதை செல்லுமானால், தென்னிந்திய இருப்புப்பாதைக் கும்பத்தார் பெரும் நட்டத்திற்குள்ளாவார் எனத் திட்டமாய்ச்சொல்லலாம். காரணம், பாதையானது பெரும்பாலும் வெறும் வெளிகளூடும் வனாந்தரங்களூடும் போய்ப் போக்குவரவு சாதனத்திற்கு அனுகூலமில்லாதிருப்பதே யாம்.

களக்காடும் அதைச் சுற்றியுள்ள சிற்றூர்களுமே நான்குநேரிதாலுகாவில் பிரதானஇடங்கள். ஜனத்தொகையிலும் அரசியலுக்குச் செலுத்தும் தீர்வையிலும் மற்ற இடங்களைவிட மேம்பட்டிருக்கின்றன. களக்காடு திருநெல்வேலிஜில்லாவிலே ஓர் பெரும் யூனியன் பட்டணமாக இருக்கிறது. களக்காட்டு மலை விளை பொருட்கள் பிரதிவருடமும் ஏறக்குறைய 25000 ரூபாய்க்கு அரசியலால் குத்தகைக்கு விடப்படுகிறது. விறகு, நெல், வெல்லம், தேங்காய், மாங்காய். முதலியன களக்காட்டிலிருந்தும் அதன் சுற்றுப் பட்டிகளிலிருந்தும் சேர்மாதேவிக்கும் வேறு இடங்கட்கும் ஏற்றுமதியாகின்றன. இக்காரணங்கள் கொண்டு அரசியல் எடுத்துக்கொண்ட இருப்புப்பாதை களக்காடு, அதன் சுற்றுப் பட்டிகள் வழியாய்ச் சேர்மாதேவிக்கும் வேறு இடங்கட்கும் போகுமாயின் வியாபாரப்போக்கும் பிரயாணிகள் தொகையும் எவ்வண்ணமிருக்குமென கண்கறியலாம்.

இதனால் யாம் கூறுவது யாதெனின் மேஷ் பாதை பாளையங்கோட்டையிலிருந்து பிரிவதற்குப்பதிலாக திருநெல்வேலி ஜங்க்ஷனிலிருந்து பிரிந்து பின்வரும் இடங்கள் வழியாய்ச் செல்லலாமென்பதே. 1. மேலப்பாளையம் 2. சிங்கிகுளத்தின் கிழக்கு (பெருஞ் சந்தை) 3. நாங்குநேரிக்கும் களக்காட்டிற்கும் மத்தி அல்லது பிரயாணிசத்திரம் வழியாய் முதல் முதல் சர்வேசெய்யப்பட்ட நாங்குநேரிதாலுகாபீஸ் அருகாமை 4. ஏர்வாடி 5. வள்ளியூர் 6. பணகுடி.

இப்பாதையானது இருப்புப்பாதைக் கம்பெனியாருக்குமட்டும் அனுகூலமென்றல்ல, பொதுஜனங்கட்கும்வெகு அனுகூலமானது.

இதனால் இந்திய அரசியலை மேற்கூறப்பட்ட காரணங்களைப்பற்றி இது சம்பந்தமாகிய விஷயங்களின் உண்மையறிந்துகொள்ளும்படி மன்றாடுகிறேன். இவ்வாறு செய்யின் ஜனங்கட்கும் தாலுகா முழுவதற்கும் பிரயாணிகட்கும் பேருதவியாயிருக்குமென்பதே எனதபிப்பிராயம்.

"ஜஸ்டீஸ்."

## கள்ளர்கள் மகாநாடு.

ஸ்ரீமான் ராஜப்பா அவர்களின் தலைமையில் நாகபட்டணத்தில் கூடிய கள்ளர்கள் மகாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்களில், தங்கள் வழக்குகளை கோர்ட்டுக்குவிடாமல் ஜாதியத்தலைவர்களை வைத்துத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், தங்களுக்குள் உயர்வு தாழ்வு என்ற பாகுபாடிருக்கக் கூடாதென்றும், உத்தக்கதரையே எல்லோரும் கட்டவேண்டுமென்றும் தீர்மானித்திருக்கின்றனர்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



நாடார்குலமித்திரன்

அக்ஷய ஹு அற்பிசி மீ ௧௬ உ

## எச்சரிக்கை.

சென்னை சட்டசபைக்கு திருநெல்வேலி ஜில்லாவிலொரு அபேட்சகராய் நிற்கும் ஸ்ரீமான் அரி. அ. சு. துரைச்சாமி நாடாரவர்களும், அவர்கள் சகாக்களும் அதிதீவிரமான வேலை செய்திருக்கிறார்கள்; செய்து கொண்டும் வருகிறார்கள். சென்ற வாரத்தில் நாம் குறிப்பிட்ட பிரகாரம் பல அபிமானிகள் வெளியிலிருந்து போய்வேலை செய்வதாகவும் தெரிகிறது. நாடார் மகாஜன சங்கம் காரியதரிசி ஸ்ரீமான் பாண்டிய நாடாரவர்களும் அவரது சகாக்களுடன் புறப்பட்டுப் போயிருக்கிறார்கள். ரெட்டியார், நாடார், பிள்ளை ஆகிய மூவருக்குந் தான் பலமான போட்டியும், துரிதமான பிரசாரமும் நடைபெறுவதாகத் தெரிகிறது. நாடார்களாவது, நாடாரையே தேர்ந்தெடுக்க வேணுமென்ற உறுதி கொண்டால் வேறு யாருடைய எதிர்ப்பும் நாடாரைப் பாதிக்காது. நாடாருக்கே வெற்றியென்பதை முன்பே குறிப்பிட்டிருக்கிறோம்.

தற்போது ரெட்டியாரும், பிள்ளையும் நாடார்களுக்கிடையில் பல சூட்சிகள் செய்வதாகவும் தெரிகிறது. அதுவும் திருச்செந்தூர் தாலுகாவிலேயே முக்கியமாய் நடைபெறுவதாக நமக்குப் பல கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. சில நாடார் பிரமுகர்கள் ரெட்டியாருக்கும், பிள்ளைக்கும அந்தரங்கத்தில் கட்டுப்பட்டவர்களாயிருக்கிறார்களென்று கூட அனுமானமேற்படுகிறது. நாடார்களில் அப்படியுமொரு பிறவி இருக்கக் கூடுமானால் மாசற்ற விடத்தில் மாசுண்டாக்கிய தோஷம் அவர்களைத் தொடாமா தொழியுமா? பாம்புக்குத் தலையும், மீனுக்கு வாலுங் காட்டுவதாயின் அது பெரிய மோசமேயாகும். நாடாரைப் பார்க்கிலும் நாடாரல்லாத வொருவர் நாடார்களுக்கு அவ்வளவு பெரிய நன்மை செய்துவிட முடியாது. நாடாரல்லாதவர்களிலும் ஒரு சிலர் நாடாருக்கு நல்லவர்களாயுமிருக்கலாம். இருந்தாலும் ஜாதி இரத்தம் நாடார் நரம்பில்த்தான் ஓடிக் கொண்டிருக்குமென்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. ஆகவே இது சமயம் ஏமாந்து விடக்கூடாது. எதிர்க் கட்சியார் தாங்கள் வெற்றியடைவதற்குப் பக்குவமாய்ச் செய்ய வேண்டிய வேலைகளைச் செய்யத்தான் செய்வார்கள். அவர்களுக்குச் சரியானபடி புத்தி கற்பித்து விட வேண்டியது நாடார்களின் முதற் கடமையாகும்.

திருநெல்வேலி ஜில்லா நாடார் குலாபிமானிகாள்! திருச்செந்தூர் முருகனாலயம் ஆதியில் யார் வசமிருந்தது? தற்போது யாருடைய ஆதிக்கத்திலிருக்கிறது? மேலக் கோபுர வாசலை அடைத்து நாடார்களை அவ்வழி செல்ல விடாமற்றடுத்து, அவ்வழியில் எவ்விதமும் செல்ல விடாதபடி இப்போது பலமாகக் கட்டியும், ஆயிரக்கால் மண்டபத் தாதிக்கத்தை நாடார்களுக் கில்லாமற் செய்தும், காயாமொழி ஆதித்த நாடார் வகையறாவுக்கு இருந்த மரியாதைகளிற் பலதைக் கெடுத்தும், இரண்டு வருஷத்திற்கு முன் இராதோற்சவத்தில் வடந்தொட்டுக் கொடுக்கும் வழக்கத்தைப் பங்கப்படுத்தியும்பல கொடுமைகள் செய்வதற்கெல்லாம் காரணஸ்தர்கள் யார் யார் என்பதை நன்றாய்க் கவனியுங்கள். இக்கொடுமைகளை நாடாரல்லாத எந்தப் பெரிய மனிதராவது கவனித்தார்களா? இவ் வநியாயத்தையும், அக்கிரமத்தையும் தடுக்க சிறிதளவேனும் இது காறும் முயற்சி செய்தார்களா? இனிமேலாவது முயற்சி செய்வார்களா? நாம் வசிக்குமிடங்களிலுள்ள சிறுகஷ்டங்களை, நம்பக்கத்திலிருந்து பார்த்துக் கொண்டும் யாதேனும் செய்ய வகையறியா மனிதர் சட்டசபைக்குப் போய் நாடார்களுக்கு எதைச் செய்து விட முடியும்? புதிய சீர்திருத்தத்திற்குப் பிறகு சென்ற ஆறு வருஷங்களிலும் சட்டசபையிற் குந்தியிருந்த பிள்ளையவாள்கள் என்னென்ன செய்திருக்கிறார்கள்? விரல் விட்டு எண்ணிப் பாருங்கள். இப்போதப்பா வென்றால் உச்சி குளிர்ந்து விடுமா என்பதைச் சிந்தித் துணருங்கள்.

ஒரு சிலர் நாடார்களிடத்தில் வாய்பொத்திக் கை கட்டி மரியாதையும், வணக்கமும் காட்டி மேலாக மதிப்பதுபோற் பாசாங்கு செய்து இடங்கண்டு நுழைந்திருப்பதை யெல்லாம் உறிஞ்சிக் கொள்வது அவர்களுடைய வழக்கம். இப்படித் தான் திருச்செந்தூர்க் கோயிலை ஏமாற்றிப் பிடுங்கிக் கொண்டார்கள். இக்கதை எல்லா நாடார்களுக்கும் தெரியும். ஆயினும் மாய வார்த்தைகளில் மயங்கிவிடக் கூடாதென்று எச்சரிக்கை செய்ய வேண்டியது நம்முடைய கடமை. அடியிற்கண்ட கனவான்கள் இச்சமயம் நமது நாடாருக்கு வெற்றியுண்டாகும்படி வேண்டும் முயற்சிகள் செய்ய வேண்டுகிறோம். காயாமொழி ஸ்ரீமான்களான எஸ். அழகானந்த ஆதித்த நாடார், எஸ். எஸ். ஆதித்த நாடார், ஆர். புதுகயினர் ஆதித்த நாடார், எஸ். எஸ். சிவசுந்தர ஆதித்த நாடார், ஆறுமுகநேரி எஸ். பொன்னையா நாடார், கச்சினுவிளை கெங்கை ஆதித்த நாடார் ஆகிய திருச்செந்தூர்த் தாலுகாவிலுள்ள இவர்கள் நினைத்தால் முடியாத காரியம் ஒன்றுமில்லை யென்று நமக்கு நன்றாய்த் தெரியும். அவர்கள் வேலை செய்து வெற்றி மாலை சூடுவார்களென்பதே நமது துணிபு.

# குறிப்புகள்.

## முன்னுக்குப் பின் முரண்.

வேளாளர் மகாநாட்டிற்றலைமை வகித்த டாக்டர் வி. நடேசமுதலியார் அவைத்தலைமைச் சொற்பொழிவுட்டுரையில், 20 ஆயிரவருடங்களுக்கு முன்னரே பிரபல்யமடைந்த தமிழ்நாட்டிற் ஜாதி பேத மில்லையென்றும், 4000 ஆண்டுகளுக்குப் பின் ஆரியப்பிரவேசத்தால் சேர சோழ பாண்டியர் ஆந்திரர் என்ற ஜாதிப்பிரிவுகளுண்டானதென்றும், பயிரிட்டுண்போர் வேளாளர் என்றும் பிறிதோரிடத்தில் வேளாளர்கள் தமிழ் விவசாயிகளென்றும் சொல்லி தமிழர் சமுகத்தில் சந்யாசிகளுக் கடுத்த மகான்கள் அவரே; அது பற்றி ஸ்ரீராமபிரானுக்கு முடிசூட்டக் கிரீடத்தை வசிஷ்டர் ஒரு வேளாளர் கையிற்கொடுத்தார் என்றும், சேர சோழபாண்டிய மன்னர்களும் வேளாளரே என்றும்கூறியுள்ள இவரது கூற்று முன்னுக்குப்பின் முரணாயிருக்கிறது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

## மகாத்மா காந்திக்கு

நாம் வணக்கமும் மரியாதையுங்காட்டுவது கதர்க் கட்டுதலே. நமது தேசத்தின் மானத்தைக் காப்பாற்றுவதும் கதர்கட்டுதலே. தீபாவளி தினத்தன்று செய்யும் கிரிகையை அந்நிய ஆடை நிசரகமாய்தன்னுடை சம்பூரணமாய்ஏன் கொள்ளக்கூடாது? 1 ரூபாய் 8 எட்டணா விலை பெறுமான பஞ்சுக்கு 15 ரூபாய் விலை கொடுத்து வாங்குவது எவ்வளவுமதியீனமாகும்! அதாவது 1703 நம்பர்மல் விலை ரூ15. அதன் பஞ்சின்கிரயம் ரூ 1—8—0. 13—8—0ரூபாய் மக்கு நஷ்டம். இப்படி வருஷம் ஒன்றுக்கு 60 கோடி ரூபாய் நம்மிந்தியாவுக்கு நஷ்டமேற்படுகிறது. இதனால் இந்தியாவறுமை நோயால்வருந்துகிறது. வீணுடம் பாதிலும் மேலான உத்தியோகத்திலும் சுயராஜ்யம் வந்துவிடாது. இவ்வுண்மையான சுயராஜ்யம் கதர் மூலமாயின்றெழும்புமென்று மகாத்மாகாந்தி நமக்குச் சொல்லிவருகிறார். தண்டாமரையிலுடன் பிறந்தும் தண்டேனுகராமண்டேம்போல்நம்நாட்டார்கள் அவர் கொள்கைகளையெல்லாம் முழுமனதுடன் ஆதரிக்கவில்லை. அந்நியநாட்டிற்கு அவர் பெருமை அதிகமாய்ப் பரவுகிறது. நமது நாட்டுப் பஞ்சையும் பருத்தியையும் அந்நியருக்கு 1 ரூபாய் 8 அணாவுக்குக் கொடுத்துவிட்டு பின்னர் அதையே அவர்களிடமிருந்து 15 ரூபாய் கொடுத்து வாங்குவது போல் இப்போது இலவசமாய்க் கிடைக்கும் மகாத்மாகாந்தி கொள்கையையும் பின்னொருகாலம் அந்நியரிடத்தில் பணங்கொடுத்துப்போதம் பெறும்படி நேருமோ யாதோ அறியோம். நம்பின் வார்சுகளுக்கு அத்தகைய தொந்தரவில்லாமற செய்யவேண்டுமானால் வெளியாடை மயக்கத்தை எல்லோரும் உடனே ஏன் விட்டுவிடக்கூடாது? அரையாடை தரிக்கவும் வகையில்லா அனேக ஆடவரும், மேலாடை தரிக்க வேணதில்லா வெகு ஸ்திரீகளுங்கூடிய குழுவில் ஒரு மனிதன் மின்னொளி போன்ற பட்டாடை தரித்து விளங்குவதில் என்ன பெருமை? என்ன தருமம்? என்ன நாகரீகம்? என்று எல்லோரும் எண்ணிடில் எங்குங்கதர் மயமாயிலங்கிடுமன்றோ? இன்றே சுயராஜ்யம் என்றே இயம் பலாமன்றோ? கட்டத்துணியின்றி குடிக்க கஞ்சியின்றி பாதவிக்கும் நம் பாரத மக்களில் பல சகோதரர்கள் வருந்துந் துயர் தீர்ப்ப 60 கோடி ரூபாய் வருஷம் ஒன்றுக்கு நமக்கு லாபங்கிடைக்க இந்திய மக்களனைவரும் கதர் கட்டவேண்டிக்கொள்கிறோம்.

## மூழ்குவிபத்து.

சென்னை "ஹிந்துநேசன்" பத்திரிகாசிரியர் ஸ்ரீமான் ல. அனந்தய்யாவர்களின் அருமைப்புதல்வன் முத்துக்கிருஷ்ணன் என்பவர் தசராவிடுமுறைகாலத்து திருவலஞ்சுழியிலுள்ள தனது பாட்டனார் வீருகத்திற்கு வந்திருக்குங்கால் 15-10-26 சரஸ்வதி பூஜையன்று ஆங்குள்ள அரசலாற்றிற்கு நீராடச்சென்ற விடத்து பிரவாக வேகத்தில் அடியுண்டு மூழ்கியிறந்தனரெனக் கேட்டு பெரிதும வருந்துகிறோம். செல்வப் புதல்வனின் பிரிவாற்றாது துயருறும் அவரது குடும்பத்தாருக்கு ஆண்டவன் ஆறுதலளிப்பாராக.

## "ஹிந்து" ஆசிரியர்.

சென்னை "ஹிந்து" ஆசிரியர் ஸ்ரீமான் எஸ். ரங்கஸ்வாமி ஐயங்கார் அக்டோபர் மாதம் 22 உ மதனப்பள்ளியில் காசரோகத்தால் கஷ்டப்பட்டு விண்ணுலகுயுக்கினரெனக் கேட்டு பெரிதும் வருந்துகிறோம். அவரது ஆத்மா சாந்தியடைவதாக.

# சென்னை சட்டசபை எலெக்ஷன்.

## நாடார்மஹாஜனங்களுக்கோர் அறிக்கை.

ஐயன்மீர்!

1926-ஞு நவம்பர் மீ 8 உ, (அக்ஷயஹு அற்பிசி மீ 23 உ) திங்கட்கிழமை நடைபெறும் சென்னை மாகாண சட்ட நிருபண சபைக்கு, நம் குலத்தினர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி இம் மூன்று ஜில்லாக்களுக்கும் அங்கத்தினர்களாய் வருவதற்குப் போதிய சாதகங்கள் இருந்தும், அபிமானிகள் போதுமானவரை முனைவராததைக் குறித்து விசனிக்கிறோம். எனினும், திருநெல்வேலி ஜில்லா கிராமாந்திரத் தொகுதிக்காக சதுர்வித உபாயங்களிலும் திறமை வாய்ந்த ஸ்ரீமான் அரி. அ. சு. துரைச்சாமிநாடார் அவர்களும், இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லா கிறிஸ்தவ தொகுதிக்காக பாளையங்கோட்டை, வக்கீல் ஸ்ரீமான் டானியல் தாமஸ் நாடார் பி. ஏ. அவர்களும் அபேட்சகர்களாய் முன் வந்திருப்பதைக் குறித்து சந்தோஷமடைகிறோம்.

### இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லா நாடார் கிறிஸ்தவ வாக்காளர்களே!

ஸ்ரீமான் டானியல் தாமஸ்நாடார் பி. ஏ. அவர்களைக்குறித் துங்களுக்கு மிகவும் சொல்ல வேண்டுவதில்லை யென நினைக்கிறோம். ஏனெனில், அவர் நாடாருலகம நன்கறிந்த நண்பர். சட்டசபைக்கு வேண்டிய வாக்குச்சாதுரியம் மிகவும் உடையவர். பொதுஜன ஊழியத்தில் மிக்க பிரீதியுடையவர். சட்டசபை சென்று நமது குலத்தினர்கள் முன்னேற்றத்திற்குரிய காரியங்களைச் செய்துவைக்க வேண்டுமென்ற அவாமிகவும் உடையவர். ஆதலால், தாங்கள் ஒவ்வொருவரும் குறிப்பிட்ட போலிங் ஆபீசுக்குச் சென்று தங்கள் ஓட்டுகளை கொடுப்பதோடு, தங்கள் தங்கள் நண்பர்களின் ஓட்டுகளையும் கொடுத்து ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

### திருநெல்வேல் ஜில்லா நாடார் குல ஓட்டர்களே!

ஸ்ரீமான் அரி. அ. சு. துரைச்சாமி நாடார் அவர்கள் நமது கான்பரன்ஸ்களுக்கு தவறாது விஜயம் செய்து, சிரமத்தைக் கருதாது முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்ற எடுத்துக் கொள்ளும் சிரத்தையையும், பொதுஜன ஊழியத்தில் அவருக்குள்ள திறமையையும் நீங்கள் நன்கறிந்திருக்கலாம். இவர், நமது குல முன்னேற்றமே தன்னேற்றமாகக் கொண்டவர். எந்தக்காரியத்தையும் விடாதுமுயற்சி எடுத்து முடிப்பதில திறமை வாய்ந்தவர். சட்டசபைசென்று எதற்கும் அஞ்சாது நம்குல நன்மைக்கும், தேச நன்மைக்கும் போர் புரிவதில உத்தம போர்வீரன் போன்றவர். ஆதலால், ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சிநேகிதர்கள் சகிதம் போலிங் ஆபீசுக்குச் சென்று ஓட்டுக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

### அபிமானிகளே!

எலெக்ஷன் தேதியில் (8-11-26) ஒவ்வொருவரும் தங்களுக்கு செல்வாக்குள்ள பக்கங்களுக்குச் சென்று ஓட்டர்களை சேகரித்தனுப்பும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டுழைக்கும்படி கேட்டுக்கொள்வதோடு, நம்குல ஓட்டர்கள் தங்கள் தங்கள் ஓட்டுகளை அவர்களுக்குத்தவறுமல் கொடுத்தும், தங்களுக்கு தெரிந்த நம்மனைய சகோதரர்களின ஓட்டுகளையும அவர்களுக்கு கிடைக்கும்படி செய்தும் இவ்விரு கனவான்களையும் நமது பிரதிநிதிகளாக சட்டசபையில் வீற்றிருக்கச் செய்ய சிறிதும் பின்வாங்க மாட்டீர்களென்று மனப் பூர்வமாய் நம்புகிறோம்.

பா. ம. பாண்டிய நாடார்

ஆ. அ. ஆறுமுக நாடார்

காரியதரிசிகள்

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## யாருக்கு ஓட்டுக் கொடுப்பது?

(காயாமொழி அ. ப. ஆதித்தன்.)

சென்னை சட்டசபை எலெக்ஷன் சமீபிக்கிறது. இன்னும் ஒரு வாரந்தானிருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவுக்கு அபேக்ஷகராய் நிற்கும் ஒவ்வொருவரும் நாடார்கள் மத்தியில் பெரும்பிரசாரம் செய்கின்றனர். நாடார்களே! இது சமயம் நீங்கள் தக்க விழிப்புடனிருக்க வேண்டும். நமது நாடார் அபேக்ஷகர் இவ்வட்டகையில் இருமுறை சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டுப்போன பிறகு, தற்சமயம் பிள்ளைமார், ரெட்டியார்களுடைய பிரசாரம் பலமாய் நடக்கிறது. ஆகவே கண்ணியம்வாய்ந்தவர்களாகக் கருதப்படும் சில பெரிய தலை நாடார்களும் தங்களது சொந்த நன்மையை உத்தேசித்து பிற ஜாதியினருக்கும் உழைப்பதாக எண்ண இடமேற்படுகின்றது. ஒவ்வொரு ஜாதியினரும் தங்கள் தங்கள் ஓட்டுகளை தங்கள் ஜாதி அபேக்ஷகருக்கே கொடுக்க உத்தேசித்திருக்கும் இந்த சுயநல காலத்தில் நாடார் ஓட்டர்கள் தங்களது ஓட்டுகளில் ஒன்றையும் பிற ஜாதியினருக்குக் கொடுக்க நியாயமில்லை. ஆகவே நாடார்களனைவர்களே! கவனியுங்கள். இந்த நவம்பர் மீ 8௳ எலெக்ஷன் சமயம் நமது ஓட்டுகளை நமது நாடார் அபேக்ஷகருக்கே அளிக்கவேண்டும். பணத்திற்காகவும் எலெக்ஷன் தினம் வண்டியும் மோட்டாரும் சகல சௌகர்யங்களும் செய்து உங்களை அழைத்துச் செல்வோம் என்று சொன்னதற்காகவும் வழக்கம்போல் இம்முறையும் ஏமாந்து பிறஜாதி அபேக்ஷகர், அவர்களின் தூதர்கள் ஆகியவர்களின் மாயவலையில் அகப்பட்டு மயங்காதீர்கள்.

தற்சமயம் பிள்ளை ஒருவர் நாடார் ஓட்டர்களுக்கு தவறுமல எலெக்ஷன் அழைப்பு கிருபங்கள அனுப்பிப் பிரசாரம் செய்து கொண்டிருகிறார். பிள்ளையவான் நடத்தை நாடார்மக்கள் எல்லோரும் அறிந்ததேயாகும். ஆனல் ரெட்டியாரவான் சில நன்மைகள் செய்வாரென்று நம ஜனங்கள் எதிர்பார்க்கின்றனர். இதுவரை ரெட்டியாரவாள் நாடார் பொது ஜனங்களுக்கு என்னென்ன நன்மை செய்தார்கள் என்பதையும் இனி என்ன செய்வார்கள் என்பதையும் ஒரு துண்டுப்பிரசுரம் மூலம் அறிவித்தார்களில்லை. போகட்டும். ரெட்டியாரவாள் ஓர் சிறந்த புருஷோத்தமர்தான். நாமும் அவ்வளவு நல்ல மனுஷர் என்றே கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனல் அவரது ஓட்டர்கள் தங்கள ஓட்டுகளில் ஒன்றை நம் நாடாருக்குக் கொடுப்பதற்கு மறுத்த இக்காலில் நாடார் ஓட்டர்களும் ரெட்டியாருக்காக தங்கள் ஓட்டுகளில் ஒன்றையேனும் செலவிட நியாயமேயில்லை. ரெட்டியாருக்கு நல்ல செல்வாக்கு இருக்கிறது. ஆகையால் நாடார்களுடைய ஓட்டுகள் தான் அவருக்குப் போய் நிறைய வேண்டுமெனபதில்லை.

எலெக்ஷன்சமயம் யாரும் நம்ஜாதியினருக்கு நன்மைசெய்வதாகச்சொல்வது சகஜம். பின்னர் கவனிக்கமாட்டார்கள். இது இவர்களின் வழக்கமாகிவிட்டது. ஆகையால் அந்தப்பொய்யில் மருண்டுவிடாதீர்கள். மூன்றுவருடத்திற்கு முன்பு ஸ்ரீமான் பிள்ளையவர்களும் நமக்கு நன்மை செய்வதாகவே சொல்லிவிட்டு நமது வாக்குரிமைகளையும் பெற்று சட்டசபைக்குள் போனர். அவர் போனபிறகு என்னவிதமான நன்மைசெய்தார்? விரலைமடித்தால் எண்ணுவதற்கு ஒன்றுமில்லை.

ஹிந்துதேவஸ்தான பரிபாலனமசோதாவை கனம் பனகால் ராஜா சட்டசபையில் கொண்டுவந்து பிரேரிக்க அதன் மூலமாய் சபையில் விவாதம் நடக்க இருபது தினங்களில் ஸ்ரீமான் சிதம்பரநாடார் ஆலயப்பிரவேச உரிமை விஷயமாய் கொண்டுவந்த திருத்தப் பிரேரணைக்கு ஆதரவாக ஸ்ரீமான் பிள்ளையவாள் ஏதும் பேசினரா? இல்லை. வேறுதான் என்னசெய்தார்? அது சமயம் மௌனம்சாதித்து, ஜஸ்டீஸ் கக்ஷிக்காரருக்கு பக்கபலமாக இருந்தார். (ஊற்றைறக்கெடுத்தது குறுணி என்ற மாதிரி இப்படி இரண்டொரு மாசுள்ளதாய் அந்த மகா தருமகாரியமான மசோதாவும் நிறைவேறியது. அதுவும் நன்மைக்கே. நம் சமூகம் அசனுலும் வருத்தமடையாமல் மசோதாவின் நன்மையை உத்தேசித்து சந்தோஷத்திலேயே இருக்கிறது.) இப்படிப்பட்டவரை நமது (ஜில்லா) மெம்பர் என்று சொல்லிக்கொள்வதால் நமக்கேற்பட்ட பெருமையென்ன? எலெக்ஷன் சமயம் அடிக்கடி நமது மத்தியில் வரும் அபேக்ஷகர்களை அதன்பிறகு மூன்று வருஷகாலமாய் காணமுடிகிறதில்லை. இவைகள் எல்லாம் நமக்கு அநுபவமாகிவிட்டது. ரெட்டியாரும் இதற்கு முன்னுல் நம்மிடம் எப்பொழுதாவது வந்தாரா? இல்லை. பழயபிள்ளையவாளைப்போலவே புதிய ரெட்டியாரவாளும் இருக்கிறார். இந்த மெம்பர்களையெல்லாம் எலெக்ஷனுக்குப்பிறகு காணமுடியாது. இவர்களை நீங்கள் தேர்ந்தெடுத்தனுப்பினல் இந்திரபோக மாகக்கருதப்படும் சட்டசபை நாற்காலியின் இன்பத்தில் நம்மை மறந்து விடுவார்கள். பொதுவேலையாகவோ சொந்தஜோலியாகவோ நீங்கள் அவரை காணச்சென்றால் தற்சமயம் காண்பதற்கு சகவாசமில்லையாம் என்று வேலையாளிடம் சொல்லிவிட்டு விடுவார்கள். தப்பித்தவறி தெருவில் கண்டுவிட்டால் மோட்டாரில் பறந்துகொண்டிருப்பார்கள்.

வாரம் தவறாமல் வட்டரும் ரிஜிஸ்டர் வட்டரும தொடுத்துவிட்டாலும் பதிலேயெழுத மாட்டார்கள். இவைகளெல்லாம் நாம் முந்திய வருடங்களில் கண்கூடாகக் கண்டவைகளல்லவா? ஆகவே இன்னமும் நாம் ஏன் நம்பி மோசம்போகவேண்டும்? முன்பு பட்டது போதாதா? இத்தகைய அபேக்ஷகர்களை வெற்றிபெறச் செய்தால் என்ன நன்மை விளையுமென்பதை கவனித்துப் பார்க்கவேண்டும். யான் சொல்வதை நீங்கள் வேடிக்கையாக எண்ணக்கூடாது. திரும்பத் திரும்பச் சொல்கிறேன். இன்னும் ஏழேநாட்கள் இருக்கின்றன. இந்தஇளைஞன் இறைஞ்சலுக்கு செவிசாயுங்கள் இரண்டு ஓட்டுகளில் ஒன்றை பிறஜாதி அபேக்ஷகருக்குக் கொடுத்தால் அந்த ஒவ்வொரு ஓட்டுகள் சேர்ந்தே நமது நாடார் அபேக்ஷகரைத் தோல்வியுறச் செய்யும் என்பதை நீங்கள் திட்டமாய் உணர்ந்து ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும்.

நாடாரல்லாத எவரும் சட்டசபையில் நமக்காகப் பேசப்போவதில்லை. பாருங்கள் ஸ்ரீமான் சிதம்பரநாடார் ஒருவர் இருந்ததினல் தான் தேவஸ்தான மசோதாவில்கூட சந்தர்ப்பத்தை நழுவவிடாது பேச நேர்ந்தது. தன்கையே தனக்குதவி: நம்மை நாமேகாப்பாற்றிக் கொள்ளவேண்டும். நம் ஜாதியினரைத் தவிர வேறு ஜாதி அபேக்ஷகர்கள் நமக்காகப் பேசவேமாட்டார்கள். வகுப்புவாதம் வேண்டாம் என்று வெளிக்குமட்டும் சாமர்த்தியமாக பிரசாரம் நடப்பதால் அந்த வஞ்சகத்தில் நமது நாடார்மக்கள் விழுந்து தங்கள் உரிமையையிழந்து விடக்கூடாது என்று பலமாய் எச்சரிக்கை செய்கிறேன்.

நமது நாடார் அபேக்ஷகர் எப்படிப்பட்டவர் என்பதை நான் உங்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. ஏழை பணக்காரர் என்ற வித்தியாசமில்லாமல் எப்பொழுதும்எல்லோரிடமும் நெருங்கிப்பழகுகிறவர். எலெக்ஷனில் வெற்றிகிடைத்தபிறகும் அவரை எந்தச் சமயத்திலும் கண்டு அருகிலிருந்து பேசலாம். அடிக்கடி நமது பக்கத்துக்கு வரக்கூடியவர். சமயம் வாய்த்தபோதெல்லாம் நமக்காகப் போராடக்கூடியவர். ஆடம்பரமற்றவர். ஜாதி பேதம் கற்பியாதவர். தேசாபிமானம் நிறைந்தவர். மொத்தத்தில் நமது வாழ்விலும் தாழ்விலும் நம்மோடேஇருப்பவர். ஆகவே சகல ஜாதியினரும் இவரைத் தேர்ந்தெடுத்தனுப்பக்கடமைப் பட்டிருக்கிறார்கள். தேர்ந்தெடுத்தனுப்பும்படியாக வேண்டிக்கொள்ளவும் செய்கிறேன். வகுப்புவாதம் வேண்டாம் என்று வெளிக்குச் சொல்லும் சகோதரர்கள் தங்கள் அகத்தின்னும் ஒழுங்காய் நடந்து கொள்கிறார்களா என்பதை நமது நாடார் அபேக்ஷகர் தெரிந்தெடுத்தனுப்பப்படுவதிலிருந்து தீர்மானிக்கவேண்டியதிருக்கிறது. இத்தகைய புண்ணிய பூமான் அபேக்ஷகராய் நிற்பது நமது ஜில்லாவின் பாக்யமாயிருக்கிறது. எற்றசமயத்தை இழந்து விடாதீர்கள். நமது ஜில்லா பரிசுத்தமடையட்டும்.

பிராமணர்கள் நாடார் அபேக்ஷகருக்கு பக்கபலமாயிருப்பதாகவும் நாடார்கள் பிராமண அபேக்ஷகருக்கு பக்கபலமாயிருப்பதாகவும் வாக்களித்திருக்கிறார்கள். நாடார்கள் தங்கள் வாக்குப்படி நடந்தே தீருவார்கள். எந்தக் காரியத்திலும் எந்தச் சமயத்திலும் இது காலபரியந்தம் நாடார் ஜாதியினர் தங்கள் வாக்குமீறி நடந்ததே கிடையாது. இனி நடக்கப்போவதும் கிடையாது.

ஆனல் பிராமணர்கள் நாடாரை வஞ்சிப்பார்கள் என்ற யதந்தி பலமாக விருக்கிறது. வாஸ்தவமாகவே பிராமணர்கள் நாடாரை வஞ்சித்துவிட்டதாக நவம்பர் மீ 8௳க்குப் பின் தெரியப்படுமாயின் அதன் பலனை அவர்களே அநுபவித்தே தீர்வார்கள். ஒவ்வொரு நாடார்மகனும் ஒவ்வொரு இராமசர்மிநாயக்கராக மாறுவரென்பதைக் கூறுவதும் மிகையாகாது. ஆகையால் பிராமணர்கள் ஒழுங்காய் நடந்துகொள்ளவேண்டும்.

ஸ்ரீமான் துரைச்சாமிநாடாரும் அவருடைய ஆட்களும் இது சமயம் சுறுசுறுப்பாய் வேலைசெய்யவேண்டும். நட்டாத்தி பண்ணையார் மூத்துவைகுந்த நாடாரும், வாணுபம்பிள்ளை சண்முகதிரவியநாடாரும் நமது நாடார் அபேக்ஷகருக்காக நல்ல உழைப்பெடுத்திருக்கிறார்கள். அத்தோடு நமது அபேக்ஷகரும் ஸ்ரீமான் செண்பக நாடார் போன்ற பெரியமனிதர்களும் எலெக்ஷனுக்கு முன்பு இன்னும் ஒரு தரம் இவ்வட்டகையில் பிரவேசித்து ஓட்டர்களைத் தவறாதுகண்டு சொல்லிப் போவது நலமாகும். தபால்மூலமாகவும் தண்டோராமூலமாகவும் இருதுண்டுப் பிரசுரங்கள் வழங்குவதும் நலம். எலெக்ஷன் தினத்துக்கு வேண்டிய சௌகர்யங்களையும் செய்யவேண்டும். சுபம்.

---

## திருநெல்வேலி ஜில்லா கிராம
# ஓட்டர்களே!
## ஸ்ரீமான் துரைச்சாமிநாடாரவர்களுக்கே தங்கள் ஓட்டுகளைப்பதிவுசெய்யுங்கள்.

நாடார் பெருமக்களே!

சென்னை சட்டசபைக்கு திருநெல்வேலி ஜில்லா கிராமத் தொகுதியில் அபேக்ஷகராய் நிற்கும் ஸ்ரீமான் அரி. அ. சு. துரைச்சாமி நாடார் அவர்கள் குல நலம், பிறர் நலம், தேச நலம் கருதும் சிலாக்கியர்; நியாய தூரந்தரர்; நியாயவழி தவறி எதிர்ப்போரை மடக்கும் ஆற்றல் பெற்றவர்; யாரிடத்தும் சுமுகமாய் பழகுந் தன்மையினர்; பேச்சு வன்மையிலும், சட்ட ஞானத்திலும் தீரர். ஆகையால் தாங்களனைவரும் தங்கள் ஓட்டுகளை இவருக்குக் கொடுப்பதன்றியும், இதர நண்பர்களையும் கொடுக்கும்படி வேண்டியன செய்யுமாறு வேண்டுகிறோம்.

---

## பலதுறைக்காரிகை.

### பெரிய இடத்தில் பிசாசு.

இந்திய ராஜப்பிரதிநிதி லார்டு இர்வின் இங்கிலாந்தில் முன்னர் தங்கியிருந்த மாளிகையில் ஒரு பிசாசு 14 வருடங்களாகத் தாமதித்து வந்ததாம். இவருடன் வசித்த ஹாலிபாக்ஸ் பிரபுக்கண்ணுக்கு ஒரு பெண்ணுருவமாக அலங்காரத்துடன் முதன் முதலாக அப்பிசாசு தோற்றியதாம். பெரிய இடமே யென்று பிசாசு அஞ்சாது எங்கும் வாசஞ்செய்யும் போலும்!

### வரதக்ஷணையின் நீதி.

கொழும்பு நகருக்கடுத்த ஒரு ஊரில் வரதக்ஷணையில் சிக்குண்ட ஜாதியாரின் பெண் வீட்டில் தங்கள் மாப்பிள்ளைக்கு திருப்தியில்லாததொரு தொகையைத் தருவதாகச் சொல்லி விவாக தினத்துவரை அதிற்பாதியை மட்டும் செலுத்தி யிருந்த காரணத்தைக்கொண்டு விவாகம் ஒரு வழியாய் ஒழுங்கு செய்திருந்தும் திருமணத்தன்று மாப்பிள்ளையைக் காணவில்லையாம். இதையறிந்த பெண்வீட்டாரின் நிலை எவ்வாறிருந்திருக்கும்? சிங்காரித்துமூக்கறுத்த கதையாயல்லவோவிருக்கிறது வரதக்ஷணையின் நீதி!

### நகையால் நேரிட்ட காதலர் முறிவு.

திண்டிவனம் ரெயில்வே ஸ்டேஷனுக்கருகிலுள்ள கிணற்றங்கரையில் பேசிக் கொண்டிருந்த தம்பதிகள் இருவர்க்கும் நகையாலேற்பட்ட பகையால் பெண்ணை புருஷன் கிணற்றில் தள்ளிவிட்டுச் சென்றுவிட்டானும். உலகில் மதிக்கற்கரிதாகிய காதல் இவர்கள்பால் நகைப் பைத்தியத்திற்போய் முடிந்தது. என்னே விந்தை தான!

### பூனைக்காருண்யம் ஆடுகோழிகளுக் கில்லையா?

தூத்துக்குடியிலுள்ள ஒரு குட்டையில் மூன்று பள்ளிச்சிறுர்கள் ஒரு பூனையை அது கத்தக் கத்த அமிழ்த்திக் கொண்டிருந்தார்கள். பாலத வழியே சென்ற வி. டி. ஜோசப் துரைக்கு பூனைமேல் இரக்கம் தோன்றி கோர்ட்டில் பையன்களுக்கு தாரதரம் போல் அபராதம் வாங்கிக் கொடுத்தார். மெச்சினேம்! இக்காருண்யத்தை பின்னை ஒவ்வொரு திவிஷந்தோறும் ஆயிரக் கணக்காய் வதைக்கப்படும் ஆடு கோழிகளுக்கு இரக்கங்காட்டுவாரிலலை?

### காஞ்சிபுரம் தேர்.

ஸ்ரீ ஏகாம்பரேசனுக்கும் விக்கிநேஸ்வரருக்கும் ஏற்பட்ட தேர் நிகழ்ரையானதை முன்னிட்டு ரூ 150000 செலவுசெய்து புதிதாக இரதங்கள் நிர்மாணிக்க பணம் வசூலாகி வருகிறது. அபிமானிகள் ஆயிரக்கணக்காய் மரங்களையும் பணமாகவும் கொடுத்திருக்கின்றனர். அதில் ஸ்ரீமான் மாரிமுத்து நாடார் அவர்கள் ரூபாய் 250 கொடுத்துள்ளார்கள்.

### மதஸ்தாபனங்களின் பேரால் 183 ஹைஸ்கூல்கள்.

பஞ்சாப்மாகாணத்தில் மதஸ்தாபனங்களால் 183ம், ஆரிய சமாஜத்தாரால் 54ம் ஸீக்கியரால் 34ம் முஸ்லீம்களால் 36 ம் ஸநாதன தர்மிகளால் 31—ம மிஷனரிகளால் 18ம ஆக 356 ஹைஸ்கூல்கள் நடைபெறுகின்றனவாம். மதஸ்தாபனங்களின் பணத்தை மதவிஷயமாகவே செலவிட வேண்டுமென்று சொல்லிக்கொண்டே நாசிக்கும் வேசிக்கும் விநியோகப்படுத்தி வரும் நம்தமிழ்நாட்டுப் பண்டாரச் சந்நிதிகள் ஒருக்கால் இதைக் கண்டால் கண்டனஞ்செய்வரோ!

### 15-க்கு 72.

கும்பகோணம் தாலுகா போர்டு தேர்தல் ஸ்தானம் மொத்தம் 15-க்கு 72 பேர்கள் அபேக்ஷகர்களாய் நிற்கிறார்களாம். பின் ஏன் தேர்தல், திருவிழாவாகாது? சண்டை யேறபட்டு மண்டையுடையாது? எச்சரிக்கையின்றி சச்சரவு நிகழாது? அளவுக்கு மிஞ்சினல் எதுவும் அனர்த்தம் விளையுமன்றே?

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## மரக்கறி போஜனம்.

மகாத்மாகாந்தி "யெளவன இந்தியா" பத்திரிகையில் எழுதியதாவது:—

மாம்சபோஜனம் செய்யும் குடும்பத்தில் பிறந்த ஒரு நிருபர் தமது பெற்றோர்களின் நிர்ப்பந்தத்தைக்கூட பொருட்படுத்தாமல் மரக்கறி போஜனமே சாப்பிட்டு வருகிறார். ஆனால் அவருக்கு ஒரு சந்தேகம். அதாவது, இந்தியாவின் தற்போதைய நிலைமையில் மாம்சபோஜனம் அவசியமானதென்று ஸ்வாமி விவேகானந்தர் சொல்லியிருப்பதை ஒரு புத்தகத்தில் படித்தேன். தாராளமாக மாம்சம் சாப்பிடும்படி விவேகானந்தர் உபதேசித்ததாகவும், மாம்ச போஜனத்தால் பாபம் சம்பவிப்பதாயின் அந்தபாபம் தன்னைச் சேரட்டும் என்று ஸ்வாமிகள் சொல்லியிருப்பதாயும் அப்புத்தகத்தில் காணப்படுகிறது என்று அந்நிருபர் சுட்டிக்காட்டி, சந்தேக நிவர்த்திசெய்யும்படி என்னைக் கேட்டிருக்கிறார்.

ஒரு பெரியவர் இன்னது சொன்னார் என்று வாசித்த மாத்திரத்தில், குருட்டுத்தனமாக அதைப் பின் பற்றுவது பல ஹீனத்தைக்காட்டுகின்றது. மாம்ச போஜனம் ஒழுங்கல்லவென்று நிருபருக்குத் திடமான நம்பிக்கையிருக்குமானால், உலகத்தையே எதிர்த்து நிற்கவும் அவர் பயப்படக்கூடாது. திடமான நம்பிக்கை உதிக்க எப்போதும் காலம் பிடிக்கும். ஆனால், அந்த நம்பிக்கை ஏற்பட்டபின் என்ன நேர்ந்தாலும் அதன்படி நடக்கத் தெரிய வேண்டும்.

ஸ்வாமி விவேகானந்தர் மாம்சபோஜனத்தின் அவசியத்தைப்பற்றிச் சொல்லியுள்ள விஷயங்களை நான் வாசித்ததில்லை. ஆனால் ஸ்வாமிகளின் அபிப்பிராயத்தை உண்மையாகவே நிருபர் தெரிவித்திருக்கிறார் என்று வைத்துக்கொண்டு பேசுவோம். என்னுடைய அபிப்பிராயம் இந்த விஷயத்தில் ஏற்கெனவே தெரிந்தது தான். எந்த நிலைமையிலும், எந்த சீதோஷ்ண ஸ்திதியிலும், மாம்சபோஜனம் அவசியம் என்று நான் கருதவில்லை. மனிதர்கள் சாமான்யமாக வசிக்க சாத்தியப்படுகிற எந்தவிடத்திலும் அது அவசியமென்று எனக்குத் தோன்றவில்லை. மாம்ச போஜனம் நமது வம்சத்துக்கு அடுத்ததல்ல. மிருகங்களைவிட நாம் மேம்பட்டவர்களாயின், மிருகங்களைப் பின்பற்றி நடந்துகொள்வது பிசகு. காமக்குரோதாதிகளை அடக்க விரும்புவோருக்கு மாம்ச போஜனம் தகாது என்பதுதான் அனுபோகம்.

ஆனால் இச்சைகளை அடக்கும் சக்தியும், நமது நடத்தை அல்லது குணத்தை உருப்படுத்தும் சக்தியும் நமது ஆகாராதிகளையே முற்றிலும் பொறுத்திருப்பதாகக் கூறுவது தவறு. ஆகாரம் ஒரு முக்கியமான அம்சந்தான்; ஆயினும் ஒருவன் கண்டபடி அளவுக்கு மிஞ்சிச் சாப்பிட்டு நாக்கு நீளமாகப் போகும்படி செய்வதெப்படிப் பிசகோ, அந்த அளவுக்கு பத்தியமான சாப்பாட்டினால் மத சம்பந்தமான வாழ்வு நடத்திவிடலாமென்று நினைப்பதும் பிசகு. மரக்கறி போஜனம் ஹிந்துமதத்தால் அருளப்பட்ட ஓர் ஒப்புயர்வற்ற நன்மை. அதை இலேசாக நாம் புறக்கணித்து விடலாமென நினைக்கக்கூடாது. மரக்கறி போஜனந்தான் நம்மை பல ஹீனமாக்கிவிட்டதென்று கூறுவது பிசகு. பெரிய பெரிய ஹிந்து சீர்திருத்தக்காரர்களெல்லாம் மரக்கறி போஜனம் செய்தவர்களாகவே யிருந்தார்கள். சங்கரர் அல்லது தயானந்தரைவிட (சரீரம் அல்லது மனதால்) அதிகமாக உழைத்துக் காட்டியவர் அவர்களுடைய காலத்தில் உண்டா?

நான் இவ்வாறு சொல்லுகிறேன் என்பதற்காக நிருபர் என்னை ஆதாரமாகக் கொண்டுவிடவேண்டாம். கேவலம் அப்படிப்பட்ட நம்பிக்கையின் பலனாக யாரும் ஆகார விஷயத்தில் ஒரு முடிவுக்கு வரக்கூடாது. அவரவர் ஆராய்ந்து பார்த்து முடிவு செய்ய வேண்டிய விஷயமிது. மேனாட்டார் மரக்கறி போஜனத்தைப்பற்றி பல நூல்கள் எழுதியிருக்கின்றனர். அவற்றையும் வாசித்துப் பயனடையலாம். இந்தியாவில் மரக்கறி போஜனந்தான் அதிகமாக விரும்பத்தக்கதும, மதிப்பிற்குரியதுமாகும். நிருபரைப்போல் சந்தேகத்தால் அலைக்கப்படுகிறவர்கள் மரக்கறி போஜனத்துக்கனுகூலமாக மேனாட்டில் தோன்றியுள்ள புதிய புதிய இயக்கத்தை ஆராய்ந்து பார்ப்பாராக.

## பல திரட்டு.

### புறக்கோட்டையில் திருட்டு.

கொழும்பு புறக்கோட்டையில் பிரின்ஸ் ஸ்டிரீட்டில் வசித்துவந்த டான்சைமன் அப்புஹாமி என்பவர் வீட்டின் பின் புறக்கதவைத்திறந்து திருடர்கள் வீட்டிற்புகுந்து 12000 ரூபாய் பெறுமான நகைகளையும் பணங்களையும் திருடிச்சென்றனராம், போலீஸார் புலன் விசாரித்து வருகின்றனராம்.

### பண்டைக்கால மனிதர்கள்.

சுமார் 10000 வருடங்களுக்கு மேற்பட்ட நாகரீகத்தையுடைய ஓர்வித ஜாதியார் அவுஸ்திரேலியாவின் வடகோடியில் வசிக்கின்றனராம். ஆடையின்றி வெட்டவெளியில் காலங்கழிக்கின்றனராம். பழங்களையும், வதைசெய்யும் ஜீவஜெந்துக்களின் மாமிசங்களையும் உட்கொள்வதால் வேலைசெய்ய வேண்டுமென்பதில்லையாம். உலகத்தில் தாங்களே இருப்பதாக நினைப்பதால் இதர கடவடிக்கைகளை அறியமாட்டார்களாம். எழுத்துவாசனை என்பதில்லை, மதமில்லை; வாய்ப்பாடந்தான் தங்கள் விருத்தாந்தமாம். ஆணும்பெண்ணும் 10-வது வயதில் பருவமடைந்துவிடுகிறார்களாம். உடன் கல்யாணமாகிறதாம். 50-வயது தான் முடிவுகாலமாம். சட்டசம்மதமில்லாது ஒரு பெண்ணுக்கு குழந்தை பிறந்தால் அப்பெண்ணுக்குக்கிடைப்பது மரண தண்டனைதானாம். ஒரு ஆண் பலமனைவிகளை மணக்கலாமாம்.

### வெடி விபத்து.

லாகூரில் தசராக் கொண்டாட்டத்தின் போது ஒரு ஜனக்கூட்டத்தினிடையே வெடி குண்டொன்று வெடித்து 40-பேர்கள் வரைக்கு காயப்படுத்திற்று! இதில் 10-பேர்வரை இறந்தனர். இது யுத்தக்குண்டென அதிகாரிகள் நினைக்கின்றனர்.

### மூடன்.

ஹைதராபாத்தில் துராக்கிரதமாக ஒரு பெண்ணை புணர்ச்சி செய்த குற்றத்திற்காக நீதிமன்றத்தில்விசாரணைக்கு கொண்டு வரப்பட்ட மனிதன் பின்னும் மூவரை கொலைசெய்து அகப்படாமல் திரிகிறானாம். தான் பிடிபடுவதற்குள் இன்னும் பல கொலைக்குக்காரணமாவேனென்று சொல்கிறானாம். என்னே இவன் வீரம் சென்றவாறு!

### ஸ்திரீ அபேக்ஷகர்கள்.

வரப்போகும் சென்னைசட்டசபை எலெக்ஷனுக்கு சங்கீத வித்வான் ஹரீந்திரநாத் சட்டோபாத்தியாயரின் மனைவியார் ஸ்ரீமதி கமலதேவியும், சாதிகள் சங்கக்காரியதரிசியாகிய மிஸிஸ் ஹாரன் அஞ்சிலோதானும் அபேக்ஷகராக நிற்கிறார்கள்.

### விசித்திரக் குகை.

வைக்கத்திற் கருகில் கீழூர் என்ற மலைப்பாங்கானவிடத்தில் ஒருகுகையும் ஒரு கோயிலுமிருக்கிறதாம். குகை ஒரு பர்லாங்கு தூரம் செல்கிறதாம். அதன்கடைகோடியிலுள்ள கதவைத்திறந்தால் ஒரு பெரிய மைதானமும் மத்தியில் ஒரு குளமும் குளத்தின்கரையைச்சுற்றி துப்பாக்கிகளும் பீரங்கிகளும் பட்டாக் கத்திகளும் காணப்படுகின்றனவாம். ஏராளமாகஜனங்கள் சென்று பார்த்துவருகின்றனர். இது தோல்வியுற்ற அரசரது புகலிடமாகவோ, கள்ளர் கூட்டத்தின் மறைவிடமாகவோ இருந்திருக்கவேண்டுமென நம்பப்படுகிறது.

### தலைவர்களுக்குள் போட்டியில்லை.

இந்தியா சட்டசபைக்கு பண்டித நேருவும், பண்டித மாளவியாவும் ஒரே டிவிஷனில் போட்டி அபேக்ஷகர்களாய் நிற்பார்களெனவதந்தி கிளப்பப்பட்டது. ஆனால் இருவரும் வெவ்வேறு தொகுதியில் வேறு ஒருவரும் போட்டியில்லாமல் அபேக்ஷகர்களாய் நிற்பதால் போட்டியன்றியில் தேர்ந்தெடுக்கப்படுவார்களெனத் தெரிகிறது.

## நோட்டீஸ்.

இராமநாதபுரம்ஜில்லா பள்ளிமடம்தாலுகா அருப்புக்கோட்டையில் நெல்,எண்ணெய்முதலிய வியாபாரம் செய்து வந்த ம. பச்சைநாடார் குமாரர்கள் ம. ப. சங்கரலிங்கநாடார் 1. ஷை தம்பி பழனிச்சாமிநாடார் 2 பேர்களும் நாளது அக்ஷய வருஷம் சித்திரைமாசத்தில் ஏதோ கெட்ட எண்ணங்கொண்டு வியாபாரத்தையும் நிலுவை செல்லும்புள்ளிகளையும் கவனியாமல் திடீரென்று எங்கேயோ போய் தலைமறைவாய் இருந்துகொண்டார்கள். இது விவரம் நாங்கள் வகையறா கிரடிட்டர்களுக்கு தெரிந்து, நாங்களும்ஷை ம. ப. ச. & ப கடைக்காரியம் பார்த்துவந்த ம. ச. மீனாக்ஷிசுந்தரநாடாரும்; ஷை அருப்புக்கோட்டையில் மு. மு. முத்துக்குமாரஸாமிநாடாரவர்கள் 1. ப. உ. ஆ. சிதம்பரநாடாரவர்கள் 2, ப. க. உ. அய்யார்சாமிநாடாரவர்கள் 3, பெ. பழனிச்சாமிநாடாரவர்கள் 4, ச. க. சு. துரைச்சாமிநாடாரவர்கள் 5, இந்த ஐந்து பேர்களையும் டிரஸ்டிகளாக நியமித்து 14—6—26-ல் 12 அணா ஸ்டாம்பில் ஓர் முச்சலிக்கா எழுதிக்கொடுத்தும் சாமான் சரக்குகளை ஒப்புவித்தும் ஷையார்களும் கிரடிட்டர்களும் சேர்ந்து சரக்கு சாமான்களை விற்பனை செய்து ஷை ம. ப. ச. & ப. கணக்கில் கண்ட எல்லா கிரடிட்டர்களுக்கும் ஷை தொகைகளை ஈவித்துக்கொடுக்கப்பட்டிருக்கிறது. ஷை முச்சலிக்காவின் சரத்துப்படி 14—6—26-க்குள் ஷையார்கள் வராமல் இன்னமும் மறைந்து கொண்டிருப்பதால் கிரடிட்டர்கள் பாக்கிகளை வசூலிக்கும் விஷயமாய் கோர்ட்டு மூலம் விவகாரத்துக்குப்போனால் கஷ்டநஷ்டம் வருமென்பதையும் தொகைதுறைந்து போகுமென்பதையும் உத்தேசித்து 10—11—26 வரை நிறுத்திவைத்திருக்கிறோம். ஷைதேதிக்குள் ஷை ம. ப. சங்கரலிங்கநாடார், ஷை பழனிச்சாமிநாடார் இவர்கள் வந்து ஒழுங்கு பண்ணி கிரடிட்டர்களாகிய எங்கள் வகையறாவுக்கு பாக்கித்தொகையை கொடுக்காத பக்ஷத்தில் ஷையார்களை எதிர்பாராமலே கோர்ட்டுமூலம் இன்ஸால்வென்ஸியாக்கி ஷையார்களுடைய ஸ்தாவரசங்கம சொத்துக்களையும் இன்னும் மறைவுதல் செய்திருக்கும் பொருள்களையும்இன்ஸால்வென்ஸி கோர்ட்டுக்குக் கொண்டுவந்து வசூலிக்க உத்தேசித்திருக்கிறோமென்பதை இதன் மூலம் தெரிவித்திருக்கிறோம்.

தெ. சி. கா. பெரியசாமிநாடார்
பிரதர்ஸ்,
தெ. சி. கா. மாரியப்பநாடார்,
கூ. சி. ரா. அ. ரெங்கசாமிநாடார்,
ப. அ. அய்யம்பெருமாள் நாடார்
தம்பி—காமாக்ஷி நாடார்,
விருதுநகர்,
மு. பெ. முத்துமாலைநாடார்,
பெ. பழனிச்சாமிநாடார்,
வ. சுந்தரச்சாமிநாடார்,
அருப்புக்கோட்டை.


## வறுமை தொலைந்தது!

வெள்ளியும் அதன் துணைக்கிரகங்களும் ஓங்கின. அது

## சுக்கிரயோகம்.

ஆகையால்,

வீனஸ் ப்ரீ லைப் அஷ்யூரன்ஸ் ஸ்கீமில் ஒவ்வொருவரும்
அங்கத்தினராகச் சேருங்கள்.
அங்கத்தினராகச் சேரும் சமயமே,
சுக்கிரயோகத்தொடக்கம்.

விபரம் வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்திற்கெழுதவும்:—
பி எஸ். எஸ். ராஜன் I. C. A.
செக்ரட்டெரி, வீனஸ் அஷ்யூரென்ஸ் பாங்க், லிமிட்டெட்,
பிராமின் காலனி; தூத்துக்குடி,

குறிப்பு:—செல்வாக்கும், ஊக்கமுமுள்ள ஏஜெண்டுகள் தேவை
நல்ல சம்பளமாவது கமிஷனாவது கொடுக்கப்படும்


### கள்ளர்கள்.

கள்ளர்களைக் குறித்து ஸ்ரீமான் எ. சிவக்கொழுந்து முதலியார் எழுதி ஸ்ரீமான் பி. எஸ். ராஜப்பாவினுல் பிரசுரிக்கப்பட்ட சிறு புஸ்தகம் நம் பார்வைக்கு அனுப்பப்பட்டது. அதில் கள்ளன் என்னும் பதம் சோழனிலிருந்து சோரனுக மருவி. அம்பட்டன் வாராவதி ஹாமில்டனிலிருந்து திரிந்து "பார்பாஸ் பிரிட்ஜ்" ஆனமுறைப்படியாயிற்றென ஸ்தாபிக்க முயலுகிறார். சரித்திர சாஸ்திர ஆராய்ச்சி முறையில் இதன் உண்மையைப் பரிசோதிக்கப் புகாமல் சோழன் தலைமுறையில் வந்தவர்கள் கள்ளர்கள் என்பதில் ஆசிரியருக்குமிகுந்த நம்பிக்கையும் அச்சாரியாரிடத்தில் சொந்த அனுபவத்தால் அன்பும் மரியாதையும் காணப்படுகின்றன. பிரியம், நியாயம்இருக்குமாயின் ஒழுங்குக்குக் கட்டுப்பட்டு நடப்பவரென்றும், அவமரியாதை, அநியாய நெறியைக் கண்டால் கோபாவேசம் கொண்டு முரட்டுத்தனமாய் நடப்பார்களென்றும் கூறியிருக்கிறார். ஆசிரியர் தமிழிலும் இது விஷயமாய் மிக்க ஆராய்ச்சி செய்திருப்பதாகத் தெரியவருகிறது. இப்போது முன் காலம் போல் அவ்வளவு சுபிட்சமாயில்லாத இவ்வகுப்பார் பொருள் கிடைத்தால் வீண் செலவு செய்து விடுவதாக எழுதப்பட்டிருக்கிறது. இவ்வகுப்பார் முன்னேற்ற மடைய வேண்டுமென்ற எண்ணத்தோடு எழுதியிருப்பதாகக் கூறும் ஆசிரியர் தமிழிலே இப்புத்தகத்தை எழுதாமல் தவறிவிட்டதைக் குறித்து வருந்துகிறோம். (சு-மி)

### கொழும்பில் புதிய நாடகம்.

கொழும்பு ஜிந்துப்பிட்டி தியேட்ரிகல் ஹால் என்ற பிரதான நாடகக்கொட்டகையில் சென்ற பல மாதங்களாக நாடகம் நடத்திவருகிற சிவசண்முகானந்த நடனசபையார் சில ஸ்பெஷல் ஆட்டங்களுக்காக நாடார்குல வித்வ வ்வேக சங்கீத சாஹித்ய கனம் வி. எ. சின்னமணிப்பாகவதரவர்களை விருதுநகரிலிருந்து தருவித்திருக்கின்றார்கள். 16—10—26உ சனிக்கிழமை சாரங்கதரன் சரித்திரம் நடைபெறும். சுமார் 4 மாதம் வரை கனம் பாகவதர் அவர்கள் கொழும்பில் தாமதிப்பார்களெனத்தெரிகிறது. இவ்விடத்திய கண்ட்ராக்ட் முடிந்தவுடன் கனம பாகவதரவர்களுக்கு விருதுநகரில் விவாஹமகோற்சவம் நடைபெறுவதை முன்னிட்டு பாகவதரவர்களுக்கு தோடாமெடல்களும், சங்கிலியும் பரிசளிக்க நாடார்குல வாலிபர்கள் முயற்சிப்பதாகத் தெரிகிறது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection






## "எம்பயர் பாம்."

எல்லா நோய்களுக்கும் தேவாமிர்தம்.

The house hold remedy for all ailments is our "Empire Balm"

ஏஜெண்டுகள் தேவை

புட்டி 1-க்கு ரூபாய் 0-8-0

டசன் 1-க்கு ரூ 5-0-0

விபரத்திற்கு:- எம்பயர்பாம் மனுபாக்சரிங் கம்பெனி என்ற விலாசத்திற்கு எழுதித்தெரியவும்

கீழமாரட் வீதி, மதுரை

## HAKEEM. K. MOHAMED YOOSOOF

MUHAMMEDIA MEDICAL HALL

PORTO-NOVO, S. A. Dt[India]

ஓ நண்பர்காள்!

நமது வைத்தியசாலைக்குநேரில் வந்து பணத்தைப்பற்றி கவனிக்கவேண்டாம். தாதுபுஷ்டிக்காக முதல் தரமானலேகியம். வேணுமென்று கேட்கும் கனவான்களுக்குமட்டும் இதை தனியாகச்செய்து கொடுத்து வந்தோம். இப்போது எல்லா ஜனங்களும் இதன் சுகத்தை அடையும்படி இப்பத்திரிகை மூலமாய் வெளிப்படுத்தி யிருக்கிறோம்.

உலகத்தில் வெளிவந்திருக்கும் லேகியங்களுக் கெல்லாம் மகுடம்

## இராஜ தத்துவ லேகியம்.

இழந்து போனபலத்துக்கும் தளர்ந்து போன நரம்புகளுக்கும் ஒரே வேளை லேகியம் சாப்பிட்டபிறகு அதிக உற்சாகத்துடன் பலத்தை கொடுப்பதில் இதற்கு சமமாய் எதைக்காட்ட முடியும்?

இந்தலேகியம சாப்பிடுகிறவர்கள் இதற்கு சமமானலேகியம்காட்டுவார்களானாலும் சரி அல்லது இதில் சொல்லப்பட்ட குணங்கள் இதில் அவ்வளவாக இல்லையென்று ரூபிப்பார்களானாலும் சரி அவர்களின் பணம் திரும்பக்கொடுத்து விடப்படும்.

உத்தரவாதமுள்ள சத்திய ஔஷதம்.

வீரிய தத்துவத்தையும் நாடி நரம்பு தாதுகளின் உற்சாகத்தையும் கொடுத்து தேக காங்கையினால் நீர்த்துப்போகும் துரிதஸ்கலிதத்தையும் சொற்பனஸ்கலிதத்தையும் 2 வேளை மருந்தில் குணப்படுத்தும். மூளையைபலப்படுத்திஞாபகசக்தியைத்தரும். பற்பலவாய்வுரோகம், இடுப்புவலி, கைகாலசந்தி, பசிமந்தம், மலச்சிக்கல் இவைகளை சுகப்படுத்த வல்ல முதல் தரமான மருந்தென்று தங்களின் சிநேகிதர் பால் புகழ்ந்து பேசுவீர்கள். பத்தியமில்லை.

ஒருராத்தல் கொண்ட டப்பி 1-க்கு விலை 10—0—0

அரைராத்தல் கொண்ட டப்பி 1-க்கு விலை ரூபா 5—0—0

கால்ராத்தல் கொண்ட டப்பி 1-க்கு விலை ரூபா 2—12—0

வி. பி. செலவு வேறு.

நமக்கு நேரில் ஆர்டர் செய்தால் மட்டில் இந்தலேகியம் கிடைக்கும். மற்றவரிடம் கிடைக்காது.

விலாசம்:—

ஹக்கீம், கா. முஹம்மதுயூசுபு,

முஹம்மதியா வைத்தியசாலை,

பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா

## உலகெங்கும் பெயர் பெற்ற

## ஸன்பிளவர் சோப்பு & ஸர்தார் சோப்பு.

சர்ட்டிப் பிக்கேட்டுகள் பெற்றவை.

கோல்டு & சில்வர் மெடலிஸ்ட்




எங்கள் கம்பெனியிற் உ. ஆ. ஸ்பைசஸ். இந் சுதேசிகள் உபயோகியுங்கள்.

| | |
|---|---|
| துணிகளை வெண்மையாக்கக்கூடியது | நூல்களை கெடுதல் செய்யாதது |
| துர்நாற்றங்களை அகற்றக்கூடியது. | யனதிற்கு திருப்திகாமுள்ளது |
| மனோற்சாகத்தைத் தரக்கூடியது. | மாணவர் மனதைமகிழச்செய்வது. |
| மலிவான விலைக்குகிடைக்கக்கூடியது. | நுரைகள் மிதக்கக்கூடியது. |
| குளிப்பதற்கு பரிமளமுள்ளது. | கெட்டரசாயனங்கள் சேராதது. |
| கோடைகாலத்திற்கு சுருக்கமில்லாதது | முழுதும் சுத்தமானது. |

குறிப்பு:— விசேஷ வருத்தமின்றி கொஞ்ச நேரத்தில வஸ்துக்கள் தோயக்கப்படும். கடினமான நீரிலும், மிருதுவான நீரிலும், குளிர்ந்த நீரிலும், சுடு நீரிலும், மழை நீரிலும், ஊற்று நீரிலும் உபயோகிக்கலாம்.

வஸ்திரத்தின் அழுக்கைப் போக்கவும் குளிப்பதற்கும் குளிர்ந்த வாசனையோடு கூடிய சோப் வேண்டுமானால்,

ஸன் பிளவர் சோப்புகளை எப்போதும் உபயோகியுங்கள்.

கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதினால் விலை விபர ஜாப்தா அனுப்புவோம்.

பிராஞ்சு ஆபீஸ்:- அம்மன் சந்நிதி, விட்டவாசல், மதுரை.

V K. அன் ஸன்,
சவுத் இந்தியன்பிஸ்கட் & சோப் மேனிபாக்சரர்ஸ்.
கீழமார்க்கட்டு நல்லமநாயுடுசந்து, மதுரை.

## விசேஷ கவனிப்பு.

இங்கிலீஷ் பாஷையை, தற்கால வர்த்தக முன்னேற்றத்தையிட்டு கற்றுக்கொள்ளவிரும்பும்

வியாபாரிகளே!

இதுவரை நாற்பதினாயிரம் ஜனங்களுக்கு அதிசீக்கிரத்தில் பல அரிய நூல்கள் மூலம் நவீனமுறையில் ஆங்கிலம் கற்றுக் கொடுத்து வந்திருக்கும் அடியிற்கண்ட கம்பெனியாரால்,

## MERCHANTS FRIEND

## வர்த்தகர் நேசன்

என்னும் ஓர் அருமையான புஸ்தகம் வியாபாரிகளின் அபிவிருத்திக்கென்றே தனியாய் பிரசுரஞ்செய்யப்பட்டு உயர்ந்த கிளேஸ் பேப்பரில் நயமான பைண்டுடன் வெளிவந்திருக்கிறது. இதன் விலை ரூ 1—4—0. வி. பி. சார்ஜ் அணா 6. இதில் வர்த்தக சம்பந்தமாய் சகலமான தந்திகள், வியாபாரக்கடிதங்கள், சாமான் சரக்குகள் முதலியவைகளை இங்கிலீஷில் சுயமாயும், சுலபமாயும், கற்றுக்கொள்ளும்படி தமிழ் அர்த்தம், வார்த்தைகளின உச்சரிப்பு சகிதம் காட்டியிருப்பதோடு, பற்றுவரவு சம்பந்தமாய் வியாபாரிகளுக்குத் தெரியவேண்டிய சகல கோர்ட்நடவடிக்கைகளையும் மற்றும் வர்த்தகத்தொழில் முறையில் தெரியவேண்டிய எல்லா இதர விஷயங்களையும் சவிஸ்தாரமாய் தமிழில் எடுத்துக்காட்டியிருக்கிறது. தவிர வாசிப்புக்கொப்பாய் தம் சங்கிலிப் பின்னல் போல் எழுதவும் கற்றுக்கொள்வது அவசியமாகையால் இதற்காக ஸ்பெஷலாய் தயார்செய்யப்பட்டிருக்கும் நூதனமுறை இங்கிலீஷ் காப்பி புஸ்தகமொன்றும் ஒவ்வொரு புஸ்தகத்துடன் இனமாய்ச் சேர்த்தே அனுப்பப்படும்.

V. S. K. சுவாமி அன்ஸன்ஸ்,
புக்ஸெல்லர்ஸ், விளாத்திகுளம்,
Via. கோயில்பட்டி, S. I. R.

ஜெகமெங்கும் புகழ் பெற்ற



அசல் சேட்

இ. பி. குமரவேல்

நயம் பீடிகள்

அன்பிற் சிறந்த கனவான்களே!

நாம் எல்லோரும் வெகு நாளாக நமது அசல் சேட் இ. பி. குமரவேல் பீடிகளை தவிர மற்ற போலி பீடிகளை உபயோகப்படுத்த மாட்டோமென்பது நிச்சயமாய்த் தெரிந்தும் சிலர்கள் போலி பீடிகளைக் கொண்டு ஊர் தோறும் பல பல பெயர்கள் சொல்லி விற்பனை செய்கிறார்கள்.

ஆனதால் நமது அசல் சேட் இ. பி. குமரவேல் பீடி கட்டுகளில் ஒட்டி இருக்கும் லேபில்களை கவனமாய்ப் பார்த்து இ. பி. குமரவேல் பீடிதானா என்று கவனித்து வாங்கி உபயோகப்படுத்தி ஆனந்தியுங்கள்.

புரோப்ரைட்டர்ஸ்,

இ. பி. குமரவேல் பீடி கம்பெனி

பிராஞ்சுகள்:—
செகன்றுபாத்து, ஐதருபாத்து & கொல்லம்

ஹெட்டாபீஸ், முக்கூடல்.

மேலே குறிப்பிட்ட எங்கள் பிராஞ்சுகளில் நயம் பீடி பல தரங்கள் தயார்செய்து தூர தேசங்களுக்கு V. P. மூலமாயனுப்பி பெரும் கியாதியோடு நடந்தேறிவருகிறது. வேண்டியவர்கள் விபரம் எழுதி கேட்கவும்.

## எலிமெண்டரி பாட ரத்தினங்கள்.

விவிக்ஸ், நேச்சர் ஸ்டடி ஸயன்ஸ் அடங்கியது. எல்லாப் பாடசாலைகளுக்கும் உபாத்திமாருக்கும் மிகவும் அவசியம். 3-ம் பதிப்பு விலை அணா 14. இது ஆசிரியரிடமும, சென்னைவேப்பேரி, எஸ். பி. வி. கே. டிப்போவிலும் கிடைக்கும்.

ஜெம் வக்கபிளரி.

இங்கிலீஷ் தமிழ் முதல் புஸ்தகம் 6 அணா; 2-ம் புஸ்தகம் 8 அணா. 6 மாதத்தில் இங்கிலீஷ் பேச எழுத லேசாய்க்கற்க எல்லாருக்கும் மெத்த அவசியம். ஒரு நேர்த்தியான லெட்டர் ரைட்டரும் அடங்கும். இது ஆசிரியர் நாகபட்டணம் மிஷின் ஹைஸ்கூல் ஆசிரியர எஸ். வீ. சொமிலபிள்ளையிடமும் ஆரணி மிஷன் பிரஸ்லும், செ சென்னை எஸ். பி. வி. கே. டிப்போவிலும் கிடைக்கும். உபாத்திமாருக்கும் வியாபாரிகளுக்கும் 12 ஜனைக்குமேல விசேஷித்த கமிஷன்.

Printed and Published. By S. A. Mutbu Nadar at the Sri Muthumariamman Press, Aruppukotta.